
www.tamilarangam.net

# பாலம்

ஆகஸ்டு, '90, இலக்கிய மாத இதழ் விலை ரூ 3.00



## அகதிகளின் அவலம்

www.tamilarangam.net



## இலக்கு

பிறந்த அன்றே
செவிப்பறை கிழிபட
இரண்டு தடவை
எங்கள் வீட்டு
இடிந்த சுவர்
தூளாக்கப் பட்டதென்றாள்
அம்மா—

அப்பா
யாரோ அழைத்தாரென
படலைத் தாண்டிப் போனவர்
பத்து வருஷமாயிற்று
இன்னும் திரும்பவில்லை

அண்ணன்
இருவர் இருந்த கதையைச்
சொல்லி
வானத்தை அளையும்
அத்தையின் கண்கள்.

குயிலின் சுருதி
கொஞ்சமும்
பழக்கமாயிருக்கவில்லை.

இசைக்குழுக்கள் மொத்தமும்
எங்கோ சென்றுவிட்டன
சில துப்பாக்கி பிடிக்க—
சில கடல்கடந்து ஜீவிக்க—

நாடுபிடிக்கும்
சரித்திரப் பிரசித்திபெற்ற
யுத்தங்கள்
இன்று
பிரமிப்பு தருவதாயில்லை.

இது வேறென்று
புரியவைக்கப்பட்டது
அழுத்தமாய் —

நானே
எஜமானனென்று
தனித்தனியே
பலரும்
சொல்லிச் சென்றனர்.

எதிர்வீட்டுச்
சின்னத் தோழியோடு
ஒருவினாடியேனும்
விளையாட ஆசைதான்—

பாண்டியாட்டக் கோடுகள்
கவசவண்டிச் சக்கரங்களால்
எப்போதோ
கலைந்து போயிருந்தன—

இதென்ன
தொல்லையென
காட்டில் பல பறவைகள்
சமுத்திரம் நோக்கிப்பறந்தன
ஓசையற்ற உலகம்தேடி—

எனக்கு
வயது வந்துவிட்டதென
அறிவிக்கப்பட்ட மறுநாள்
பதுங்கு குழியொன்றில்
குறிபார்த்துக் காத்திருந்தேன்
துப்பாக்கி கனக்க—

எதிரி யாரெனத் தெரிவிக்க
என் சினேகிதர்கள்
வந்து விடுவார்கள் சீக்கிரம்.

— நா. விச்வநாதன்

www.tamilarangam.net


# பாலம்

இலக்கிய மாத இதழ்
ஆகஸ்டு 1990

30

ஆசிரியர் :
இரா. திரவியம்

ஆசிரியர் குழு :
சமந்தா
இளம்பிறை
குமார்

தனியிதழ் ரூ. 3.00
ஆண்டுச் சந்தா ரூ. 30.00
அரையாண்டுச்சந்தா ரூ. 15.00

தொடர்பு முகவரி:
நிர்வாகி
பாலம்
25, அருணாசலபுரம்
மெயின் ரோடு
அடையாறு சென்னை-20

நிர்வாக ஆசிரியர் :
அதியமான்


## இனவாத பிஜி அரசு

பிஜி நாட்டின் மண்ணின் மைந்தர் மாலினீஷியர்கள். மண்ணின் மைந்தரான இவர்கள் பிஜியில் சிறுபான்மையராக உள்ளனர். பிஜியின் மக்கள் தொகையில் 50 விழுக்காடு இந்திய மரபினர். இவர்கள் தவிர பிஜியில் குறிப்பிட்ட விழுக்காடு அளவிற்கு பல் வேறு இனத்தவர்களும் வாழ்கிறார்கள்.

1987இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற பவத்ரா அரசை, மேஜர் ஜெனரல் ரபூகா இராணுவ அதிரடிப் புரட்சியின் மூலம் கவிழ்த்துவிட்டு, தனது ஆதரவாளரான ரது பீனியா கானிலாவ் என்பவரை அதிபராக அமர்த்தினார். இந்த கானிலாவ் ஜூலை கடைசி வாரத்தில் பிஜியின் புதிய அரசியல் சட்டத்தை வெளியிட்டார். இதன்படி நாடாளுமன்றத்தின் கீழ் அவையில் 27 இடங்கள் இந்திய மரபினருக்கும், 37 இடங்கள் மண்ணின் மைந்தர்களான மாலினீஷியர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

''தற்போதைய அரசியல் சட்டம் மாலினீஷியர்களுக்கு 'அரசியலில் ஆதிக்கத்தை' ஏற்படுத்துவதற்காக இயற்றப்பட்டது. இச்சட்டம் இனப் பாகுபாட்டை வலுப்படுத்துகிறது என்று பிஜி வாழ் இந்தியர்கள் நினைப்பார்களேயானால், தங்களுடைய சொந்த நாடான இந்தியாவுக்குச் சென்று சுகமாக வாழலாம்'' என்று இனவெறியை, பிஜி செய்தித்துறை அமைச்சர் ரது இனோகி கபுவபோலா கொப்பளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, தாம் அரசியல் அனாதைகளாக்கப்பட்டு விடக்கூடிய அபாயத்தை உணர்ந்த இந்திய மரபினர், 1991ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெறவுள்ள தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாகவும், ஒத்துழையாமை இயக்கம் நடத்தப் போவதாகவும் அறிவித்துள்ளனர். தம்முடைய கடுமையான உழைப்பின் மூலம் கரும்புத் தோட்டங்களை உருவாக்கி, பிஜியின் தேசிய வருமானத்தை ஈட்டிக் கொடுக்கிற இந்தியமரபினரின் போராட்டம் வெல்ல நாம் வாழ்த்துகிறோம். புதிய அரசியல் சட்டத்தை இந்தியா, ஆஸ்திரேலியா, நியுஜிலாந்து போன்ற நாடுகள் கடுமையாகக் கண்டித்துள்ளன.

ரபுகாவின் இராணுவ நிழலில் காலந்தள்ளும் அதிபர் கானிலாவ் செய்யும் இனவெறிச் செயற்பாடுகள் அவருக்கே எதிராகத் திரும்பும் என்பது காலந்தோறும் ஒடுக்குமுறையாளருக்கு வரலாறு உணர்த்திவரும் உண்மையாகும்.

இன, நிற அடிப்படையிலான ஒடுக்குதலுக்கு வழி வகுக்கும் தற்போதைய பிஜியின் அரசியல் சட்டத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். உரிமைக்காகப் போராடும் இந்திய மரபினரின் குரலோடு 'பாலம்' தன்னுடைய குரலை இணைத்துக் கொள்கிறது.

www.tamilarangam.net

# ஓரம்பரை

## பெருமாள் முருகன்

''வா கண்ணு''

மாராயின் முகத்தில் மகிழ்ச்சி கொப்பளித்தது. உதடுகளைக் குவித்து வெற்றிலைச் சாற்றை நீட்டித் துப்பி விட்டுச் சிரித்தாள். அவன் 'டிவிஎஸ் 50'யை வாதனாராம் மர நிழலில் நிறுத்தி விட்டு வந்தான்.

''கட்டல்ல உக்காரு வேலு. வசந்தா... வராத ஓரம்பர (சொந்தம்—உறவுமுறை) வந்திருக்குது. வெளிய எட்டிப் பாரே...''

முக்காலியைப் போட்டு உட்கார்ந்து கொண்டாள். அவன் அண்ணாந்து கொட்டாயை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான். 'ஐந்நூறு செலவாயிருக்குமா. இருக்கும் இருக்கும். இப்பப் போட்டா ஆயிரத்துக்குக் கொறையாது'

''ஊட்ல அல்லாரும் நல்லா இருக்கறாங்களா வேலு...''

''ம்... நல்லா இருக்கறாங்க''

''பையனுக்கு என்னமோ வவுத்தால போவுதுன்னு ஆசுபத்திரியில வச்சிருந்ததாச் சொன்னாங்க... எங்க இந்த வேலயப் போட்டுட்டு வர முடியுது... ஒரு நாளக்கி நம்ப சாதி சனத்தூட்டுக்குப் போயி இருக்கலாமுன்னா முடியுதா... மருமவ வந்தும் வேல ஒழியில...

''அதயேங் கேக்கறீங்க. ரண்டாயரம் செலவாயிப் போச்சு. பத்து நாளு பெடுல வெச்சிருந்தோ... இந்தக் காலத்துல ஆன்னா ஊன்னா மருந்துதான். மாத்தரதான். உறிஞ்சு எடுத்துப்புடறானுவ...''

''எங்கீங்க அத்த... ஆரே ஓரம்பர வந்திருக்குதுன்னீங்க...''

வசந்தா சாணிக் கையோடு வந்தாள். வளையல்கள் முழங்கைப், பக்கமாய் ஏறி இருந்தன. சீலையை இடுப்பில் இழுத்துச் சொருகியிருந்தாள்.

''அட...வாங்கண்ணா...அத்தி பூந்தாப்பல இருக்குது...இப்பத்தான் அவிக எங்கயோ கடைப்பக்கம் போனாங்க...''

மதிய காலத்து நிலா மாதிரி முகத்தில் வெளிச்சம். பரபரத்தாள். 'அடாடா...அவுங்கம் மோட்டுச் சனமுன்னா மட்டும் வட்டுக்கருப்பட்டி திங்கறாப்பல மூஞ்சி குளுந்து போவுதா?

''எளப்பு நோவு தேவுலியாண்ணா... மருந்து திங்கறீங்களா...''

''ம்...பரவால்ல. கட்டோடு தான் போவு மாட்டம் இருக்குது அது.''

''வசந்தா...போயி எதாச்சும் பையனுக்குத் திங்கறதுக்குக் கொண்டா போ...''

''இருக்கட்டுமுங்க. நல்லா இருக்கறயா வசந்தா...ஏது...வளய புதுசாச் செஞ்சதாட்டம் இருக்குது. எத்தனை புவுனு...''

''உஞ் சித்தப்பம் புள்ளக்கி நீங்க தான் செஞ்சு போடறீங்களா...பத்தாயரம் ரூவாச் சீட்டுப் போட்டம். அத எடுத்துப் பண்ணுனது.''

முகத்தில் சிரிப்பு வழிந்தது. வசந்தா கையைக் கழுவிக் கொண்டு, தட்டத்தில் 'ஒப்புட்டு'க் கொண்டு வந்து வைத்தாள்.

''எதுக்கு இத்தனை...ரண்டு போதும்...''

''எடுத்துக்க கண்ணு...எங்கூட்டுக்கு ஆடிக் கொருநா அம்மாசைக்கு ஒருநா வர்ற...நல்லது பொல்லாதது எதும் செஞ்சாலு ஆவும்...நேத்து பண்ணுனது தான். நல்லாருக்கும் எடுத்துக்க.''

''ராமசாமி ஒழுங்கா லாரிக்குப் போறனா.''

''போறாம் போறான். ஒரு கிறுக்கு வந்தா படுத்துக்குவான்... செரி. அம்மா எப்பிடி இருக்குது. பாத்து கொள்ள நாளாச்சு...''

''முந்தி மாதிரி சத்தில்ல. ஏதோ நடமாடிக்கிட்டு இருக்குது. வயசான காலத்துல என்ன பண்ணுறது. தொந்தரவில்லாத போய்ச் சேந்தாச் செரி...''

வசந்தா மோர் கொண்டு வந்தாள்; இரண்டு டம்ளர் வாங்கிக் குடித்தான்.

''வெய்யிலுக்கு மோரு குளுக்குளுன்னு எறங்குது. எரும வெச்சிருக்கறீங்களா...''

''ம்... ஒரு எரும இருக்குது. ஊட்டுக்குப் போவ ஏதோ கடைக்குக் குடுக்கறாங்க.''

அவன் சிகரெட் பற்ற வைத்தான். மோர் குடித்த களைப்பைப் போக்குபவன் போல் ஆழ்ந்து புகையை விட்டான்.

''இந்தக் கருமாந்தரத்த எதுக்குக்குடிக்கற. காசுக்குங்காடா... அவனும் இப்பிடித்தான் தெனமும் ஒரு கட்டுப் பீடி குடிக்கறான்...''

www.tamilarangam.net



''வண்டி வாங்குனதக்கப்பறம் பழகியாச்சு. எங்க உட முடியுது...''

''வண்டி ஓட்டம் பரவா இல்லியா''

அவள் கல்லக்கொடிப் போருக்கு வந்து விட்ட வெள்ளாடை, போய் முடுக்கினாள். 'இரு வர்றேன்' அண்ணாங்காலை அவுத்து மொளக் குச்சியில் கட்டினாள். கழிநீரைக் கொண்டு போய் குடிக்க வைத்து விட்டு வந்தாள். அவன் கட்டிலில் சாய்ந்திருந்தான்.

''வண்டி வாங்கி ஒரே அலச்சலுதான். அப்பிடி ஒண்ணும் ஓட்டமும் சொல்றாப்பல இல்ல. இந்தச் சீசனுதான் ஒழவு. அப்புறம் எங்க...''

''ம்...எதோ நம்மு கூலிக்கு வந்தாச் செரி. எங்கு காடு கூட உங்கு 'டக்'ல தான் ஓட்டுன தாச் சொன்னாங்க. நா அன்னக்கி அணிமூருக்கு ஒரு எழவுன்னு போயிட்ட''

''நாங் கூட வல்ல. ட்ரைவர் தான் ஓட்டி யிருக்கறான். இந்தப் பக்கம் அஞ்சாறு காடு ஓட்டுனானாம். நோட்டுல எழுதி வெச்சிருக் கறான், அதாம் பணம் வாங்கிட்டுப் போலா மின்னு வந்தன்...''

''பாஞ்சு நாளாயிருச்சு. கொண்ணாந்து குடுக்கலானு பாத்தோம். பணம் ஒண்ணுஞ் சேர்ல. சின்னப் பிள்ள ஊட்ல தான் கேட்டிருக் கறன். இரு போயி வாங்கியாரன்...''

அவள் போனாள். காற்று சுகமாக வந்தது. வெயிலுக்கு இதம். அவன் கண் களை மூடிச் சாய்ந்தான். நினைவு வந்தவன் போல் விழித்து 'டிவிஎஸ் 50'யைப் பார்த்தான். நிழல் கொஞ்சம் தள்ளிப் போயிருந்தது. வண்டியை எடுத்து வந்து கொட்டாயிக்குள் நிறுத்தினான். அதற்குள் அவள் வந்து விட்டாள்.

''எவ்வளவு பொன்னு ஆச்சு...''

பணத்தை எண்ணிக் கொண்டே கேட்டாள். அவன் நோட்டைப் பார்த்துவிட்டுச் சொன் னான்.

''அஞ்சு மணி நேரம். முந்நூத்தி எழுவத் தஞ்சு ரூவாயாச்சு''

''என்னது......அஞ்சு மணி நேரமா... எங்குளுதா இருக்காது. வேற ஆருதாச்சுமா இருக்கும் பாரு...''

அவள் முகம் சுருங்கியது. பணம் எண்ணு வதை நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தாள். அவன் திரும்ப நோட்டில் கண்களை ஓட விட் டிருந்தான்.

''உங்களுதுதாங்க. எட்டு மணிக்குக் காட்டுக்குள்ள வந்த வண்டி ஒரு மணிக்கு வெளிய வந்திருக்குது. அஞ்சு மணி நேரந் தாங்க.''

''அதெப்பிடி வேலு? அஞ்சு மணி நேரமா வும். கணக்கில்லாத. நாலு மணி நேரந்தான் கணக்கு. எப்பவுமே.''

''வண்டி ஓட்டுன கணக்கு நோட்ல கொட்ட எழுத்துல எழுதி வச்சிருக்குது. நீங்க இல்லீன்னா எப்படி''

''நாங்களும் நாலஞ்சு வெருசமா 'டக்'குல தான் ஓட்டறோம். எங்களுக்குக் கணக்குத் தெரியாதா. கொக்கராங் காடு ரண்டு மணி நேரம் இருக்கும். செம்மாங்காடு ஒண்ணே முக்கா மணி நேரம். அதுக்கும் மேல எப்பவும் வந்ததில்ல...''

''ஏக்கராக் கணக்கெல்லாம் எனக்குத் தெரியாது. எங்கு வண்டி ஓட்ன நேரந்தாங் கணக்கு.''

''என்னதாங் கணக்கா இருந்தாலும் என்ன...ஒண்ணேகா மணி நேரமா எச்சாவும்...''

''உங்குளுக்கு ரண்டு மணி நேரத்துல கூட எவனாச்சும் ஓட்டிக் குடுப்பான். எங்கு வண்டி ஓட்டுனது அஞ்சு மணி நேரம்.''

''அட போடா பொக்கனாத்தி...கணக்குப் பேச வந்துட்டாங் கணக்கு. நாலு ஏக்கரா ரண்டு மணி நேரம். மூணே காலு ஏக்கரா ஒண்ணே முக்கா மணி நேரம். அதுக்கு மேல எந்தக் காலத்திலயும் வந்ததில்ல...''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. அஞ்சு மணி நேரம். முந்நூத்தி எழுவத்தஞ்சு ரூவா வரோனும்...''

அவன் எழுந்து நின்று கொண்டான். வேட்டியை அவிழ்த்து இறுக்கிக் கட்டினான். முகம் இறுகியிருந்தது.

''ஏண்டீ வசந்தா...டக்கு ஓட்டறப்ப நிய்யும் அவனுந்தான இருந்தீங்க. எத்தன மணி நேரஞ் சொன்னா...''

ஊடு வழித்துக் கொண்டிருந்த வசந்தா, சாணியோடு வந்தாள்.

''நாலு மணி நேரந்தான் ட்ரைவரு சொன்னான்...''

''நோட்டுல அஞ்சு மணி நேரமின்னு எழுதி வெச்சிருக்குது. வந்த நேரம். போன நேரம். எல்லாங் கரெக்டாக் குறிச்சிருக்குது. வெளயாடறீங்களா...''

''அறுவது ருவாக்கி எத்தனயோ வண் ஓடுது. அரிசீமா இவன் வண்டியக் கொண்டி

www.tamilarangam.net



டாந்து உட்டு ஓட்டுனீங்க. மணிக்கு எழுவத் தஞ்சு ரூவான்னா...செரிப் போனாப் போவுது. இப்ப என்னடான்னா ஒரு மணி நேரம் எச்சாச் சொல்றான்..."

"ஒரு மணி நேரம் எச்சாச் சொல்லி பணம் வாங்கிட்டுப் போயித்தான் கோட்ட கட்டற நான்..."

அவள் முகத்தில் ரத்தம் கன்றிப் போனது போல் சிவப்பு. கொண்டையை ஆட்டும் சேவலாட்டம் நிலையின்றித் தவித்தாள். அவன் நோட்டை வீசி வீசிப் பேசினான்.

"உங்கு வண்டவாளம் எங்குளுக்குத் தெரியாத தாங் கெடக்குதா. நாலு மூட்ட கொட்டமுத்துக் கொண்டோயிட்டு பக்கத்துல இருந்தவனுது ஒண்ணயும் இழுத்துப் போட்டு அஞ்சுன்னு சொல்லி, அடி வாங்கிக்கிட்டு வந்தப்பத்தான் ஏழுருஞ் சிரிச்சுதே..."

"போதும் போதும். உம் பையன் மணக் கறானா...தண்ணியப் போட்டுட்டு என்னென்ன கூத்தடிக்கறான்னு எம் வாயால சொல்லோனுமா கருமத்த... அதான் ஊரே சொல்லுதே... மொதொ, பணத்த எடு..."

"போனாப் போவுது. குடுத்துரு அத்த. எடுபட்ட நாயி ஏமாத்திச் சம்பாரிக்கங் காட்டியுந் தான் எளப்பு நோவுக்குக் கொண்டோயிக் கொண்டோயி கொட்டறான்..."

"நா நாலு மணி நேரத்துக்குத் தாண்டி குடுப்பன்..."

"அஞ்சு மணி நேரத்துக்குன்னா குடு. இல்லீனனாப் பணமே வேண்டாம்...வாங்கற வழில வாங்கிக்கறம்..."

"அந்த ஆண்டவனே அவனக் கேக்கட்டும். குடுத்துத் தொல அத்த..."

"இந்தாடா... எங்கு வவுத்தெரிச்சலக் கொட்ன பணம் உனக்கு நெலக்கவா போவுது..."

கட்டிலில்வீசினாள். அவன் எடுத்து எண்ணி டிராயர் பாக்கெட்டில் திணித்தான். 'டிவிஎஸ்'ஸைத் தள்ளினான்.

"இன்னமே இவன் வண்டி மொவத்துல முழிச்சாலும் ஆவாது. ஒரு நூறுரூவா தெண்டம். இத்தனக்கும் ஒழவு கீறிக் கீறி உட்ருக்கறான்... எம் பணம் வவுத்துல அறுக்கட்டும் எச்சக்கலையனுக்கு..."

"இதா. வாய அடக்கிப் பேசு, என்னமோ பொம்பளயாச்சேன்னு பாத்தா...... சும்மா எவுர்றியே..."

"அடே... ஒரு சாதிக்குப் பொறந்தவனா இருந்தா என்னோட எடத்துல நிக்கக் குடாது..."

"விருந்து சாப்பட வர்றாங்களா உன்னூட்டுக்கு. மூஞ்சியில முழிச்சாக் கூடத் தருத்தனம் புடிக்கும்..."

அவன் வண்டியை ஸ்டார்ட் செய்தான். மண்ணள்ளித் தூற்றி நெஞ்சிலடித்துக் கொண்டாள்.

"அவனே கேக்கட்டும்..."

"ஆரக் கேக்கறான்னு பாப்பம்..."

"அடப்போடா நாயே..." ○

## ஈழச் செய்திகள்

- சென்னையில் இலங்கைத் தமிழர்கள் யார், யார் எங்கெங்கு வாழ்கின்றனர் என்பதைக் கணக்கெடுக்க போலீசார் வீட்டுக்கு வீடு சென்று கணக்கெடுத்து வருவதாக மாநகர போலீஸ் ஆணையர் ராஜசேகரன் நாயர் தெரிவித்தார். தமிழ் நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்கள் தங்களைப் பற்றிய விவரங்களை அருகேயுள்ள போலீஸ் நிலையங்களில் பதிவு செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்ட அறிவிப்புக்கு நல்ல பலன் கிடைத்திருப்பதாக அவர் கூறினார். (தினமணி, 6.7.90)

- இலங்கையில் குலை நடுங்கும் பயங்கரவாத நடவடிக்கைகளில் சர்வசாதாரணமாகத் துணிச்சலுடன் ஈடுபடும் புரட்சிகர மக்கள் செம்படை (பி.ஆர்.ஆர்.ஏ.) என்ற சிங்கள கொலைப்படை கிழக்கு மட்டக்களப்பில் நடமாடுவது முதன்முறையாகத் தற்போது தெரியவந்துள்ளது. கழுத்தில் டயரை மாட்டி தீயிட்டு உயிரோடு கொளுத்தப் பட்ட 5 சடலங்கள் தெருமுனையில் காணப் பட்டன. "இதுதான் பிர்பாகரனின் பிரிவினைவாதத்தின் கதியாகும்" என்றும் "இப்படிக்கு, பி.ஆர்.ஆர்.ஏ" என்றும் எழுதப்பட்ட போர்டு அந்தச் சடலங்கள் அருகே காணப்பட்டன. (தினமணி, 7.7.90)

www.tamilarangam.net

மார்க்சியத்தின் எதிரிகளுக்கு—அதாவது எல்லாவிதமான ஏற்றத்தாழ்வுகளும் சுரண்டலு மற்ற ஒரு உலகையும் மனித சமூகத்தையும் உருவாக்க வேண்டும் என்ற கருத்தின் எதிரி களுக்குக் கொண்டாட்டமான காலமிது. பொது வுடமைத் தத்துவம் என்கிற பூதத்தால் அரண்டு கிடந்த இந்த ஒன்றரை நூற்றாண்டு காலத்தில் இவர்கள் இன்றளவிற்கு என்றும் மகிழ்ச்சியாய் இருந்ததில்லை, ரசியா, சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அதாவது புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில் (பு.பி.ச.) ஏற்பட்டுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிகளின் அடிப்படையில் இவர்கள் பொதுவுடமைத் தத்துவத்திற்குக் கல்லறை வாசகங்கள் எழுதுவதில் சுறுசுறுப்பாய் இருக்கிறார்கள். வெவ்வேறு வடிவங்களில் இந்தக் கல்லறை வாசகங்கள் ஒலிக்கின்றன. அவற்றில் சில :

★ சோசலிசக் கட்டுமானம் என்பது எதார்த் தத்தில் சாத்தியமற்ற வெறும் கனவே!

★ சோசலிசமும் சனநாயகமும் ஒன்றாக இருப்பது சாத்தியமில்லை; முதலாளி யமும் சனநாயகமே ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்!

★ மார்க்சியம் மரணத்தைத் தழுவிவிட்டது, பொதுவுடமைத் தத்துவம் காலாவதி யாகி விட்டது!

★ பொருள் முதலியத்தைக் கருத்து முதலியமும், அறிவியலை அறவியலும் வென்று விட்டன !

இந்தக் குரல்களின் தர்க்க நியாயங்களைப் பரிசீலிக்கும் முன்பாக ஒன்றை நாம் நினை வூட்டிக் கொள்வது உசிதம். எம். என். கோவிந்தப் பிள்ளை சொல்வது போல கடந்த நூறாண்டு காலமாகவே இவ்வாறு மார்க்சியத் திற்குக் கல்லறை வாசகங்கள் எழுதும் முயற்சிகள் தொடர்கின்றன. எங்கல்சின் மரணத்தைத் தொடர்ந்து வெளியிடப்பட்டுப் பல ஐரோப்பிய மொழிகளில் பெயர்த்துக் கொண் டாடப்பட்ட யூகின் பாம்பாவெர்க்கின் ''கார்ல் மார்க்சும் அவரது அமைப்பின் இறுதியும்'' என்கிற நூல் தொடங்கி ஐரோப்பியத் தொழிலாளி வர்க்கம் சீர்திருத்தவாதத்தில் சீரழிந்தபோதும், ஸ்டாலினியக் கொடுமைகள் உலகிற்கு வெளிப்பட்டபோதும், சீன-சோவியத் பிளவின் போதும், மாவோவின் மரணத்திற்குப் பிந்திய சீனப் பாதை விலகலின் போதும் இத்தகைய முயற்சிகளை உலக முதலாளியம் உற்சாகத்தோடு மேற்கொண்டதைஉலகறியும். ஒவ்வொரு முறையும் இவர்களது எதிர்பார்ப் புக்கள் முழுமையாக நிறைவேறவில்லை என்கிற உண்மை ஒருபுறம் கிடக்கட்டும். இங்கே நாம் கவனிக்க வேண்டியது வேறொன்றை. மேற்

1

குறித்தச் சந்தர்ப்பங்கள் அனைத்தின்போதும் உலகெங்கிலுமிருந்த அமைப்பு ரீதியாய் திரட்டப்பட்டப் பொதுவுடமைக் கட்சிகள் எல்லாம் இக் கூற்றுக்களைக் கடுமையாய் எதிர்த்திருக்கின்றன. கருத்தியற் களத்தில் கடும்போராட்டத்தை நடத்தியிருக்கின்றன. ஒரு உன்னதமான சமூக நிர்மாணத்திற்கான சரியான பாதை சோசலிசக் கட்டுமானமே என்றும் காலாவதியாகியிருப்பது நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் முதலாளியமே என்றும் உரத்த குரலில் முழங்கியிருக்கின்றன.

ஆனால் இன்று......?

நிலைமை நேரெதிராக இருக்கிறது. ஒரு பக்கம் கருத்தியல் மட்டத்தில் முதலாளிய சக்திகள் நடத்தும் சமரசமேயில்லாத கடுந் தாக்குதல். இன்னொரு பக்கம் பு. பி. சமூகங் களிலுள்ள பொதுவுடமைக் கட்சிகளின் முழுமை யான சரணாகதி.

○ ஆம், சோசலிசக் கட்டுமான முயற்சியும் மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலும் தோற்றுத்தான் விட்டன.

○ தனிச் சொத்துரிமையையும் சந்தைப் பொருளாதாரத்தையும் அனுமதிக்காமல் சனநாயகமும் சிவில் உரிமைகளும் சாத்தியமில்லை.

○ சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி ஆகியவற்றில் உறுப்பினராவது உட்பட உலக முதலாளியக் கட்டமைப்பில் இணைத்துக் கொள்ளாமல் 'சோசலிசம்' நெருக்கடியிலிருந்து தப்புவது இயலாது.

○ உலக முதலாளியக் கட்டமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டு, ஏகாதி பத்தியங்களைச் சார்ந்து நின்று முதலாளியப் பாதையை மேற்கொள்வ தொன்றே மூன்றாம் உலக நாடு களுக்கான சரியான வளர்ச்சிப் பாதை.

○ எல்லோருக்கும் வேலை, பணவீக்க மின்மை, கல்வி, மருத்துவம் போன்ற

## மார்க்சியம் தோற்கவில்லை

### நெருக்கடிக்குள்ளாகியிருப்பது

### ''அறியப்பட்ட'' மார்க்சியமே

அ. மார்க்ஸ்

www.tamilarangam.net



> அடிப்படை வசதிகள் அனைவருக்கும் பூர்த்தி செய்யப்படுதல் என்பதெல்லாம் சோசலிசக் கட்டுமானத்தின் பிரதான அம்சங்கள் எனக் கொள்ள வேண்டிய தில்லை,

என்பன போன்ற கருத்துக்களை இன்று முழங்கிக் கொண்டிருப்பவர்கள் மார்க்சிய எதிரிகள் மட்டுமல்ல. பு.பி. சமூகங்களிலுள்ள பொதுவுடமைக் கட்சியினரும், அறிவாளிகளும் ரசியப் பொதுவுடமைக் கட்சியுடன் தங்களைத் தகவமைத்துக் கொண்ட உலகெங்கிலுமுள்ள பொதுவுடமைக் கட்சியினறும் மேற்படிக் கருத்துக்களின் ஊது குழல்களாக மாறி யுள்ளனர்.

இது தவிர, இன்றைய நெருக்கடிகளின் அடிப்படையில் மார்க்சியத்தின் மீது தொடுக்கப் படும் தாக்குதலுக்கும், இவர்கள் யாரும் எந்தப் பதிலையும் முன் வைப்பதில்லை. முதலாளியம் சந்தித்துக் கொண்டிருக்கும் கடும் நெருக்கடி களையும் சுட்டிக் காட்டுவதில்லை. கருத்தியற் சரணாகதி என்பது தவிர மேற்படி கருத்துக் களின் அடிப்படையில் மையப்படுத்தப்பட்டத் திட்டமிடுதலின் பங்கைக் குறைத்துச் சந்தைச் சக்திகளைக் கட்டவிழ்த்து விடுவது, சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து உதவி பெறுவது, பன்னாட்டு நிறுவனங்களை அனுமதிப்பது, தனிச் சொத்துரிமைக்கான தடையை நீக்குவது, வேலை இல்லாத் திண்டாட்டம்/பணவீக்கம் ஆகியவற்றை அனுமதிப்பது, வெளியுறவுகளில் சகல அம்சங்களிலும் மேலை முதலாளியங் களுடன் சமரசமாகிப் போவது போன்ற நடவடிக்கைகளைப் பு.பி. சமூகங்களிலுள்ள பொதுவுடமைக் கட்சிகள் நடைமுறையில் மேற் கொண்டு வருவதையும் நாம் காண்கிறோம். இதற்குச் சமமான நல்லெண்ண அடிப்படை யிலான மறு நடவடிக்கைகள் எதையும் மேலை ஏகாதிபத்தியங்கள் மேற்கொண்டு விடவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. . எடுத்துக் காட் டாகக் கோர்ப்பசேவ் தனது நாட்டின் படைபல எண்ணிக்கையையும் பாதுகாப்புச் செலவை யும் நிபந்தனையின்றிக் குறைத்துக் கொண்டுள் ளார். அமெரிக்காவோ பாதுகாப்புச் செலவை அதிகரித்துள்ளது. மரபு வழிப்பட்ட ஆயுதங்களை யும் அணு ஆயுதங்களையும் மத்திய ஐரோப்பா வில் குறைத்துக் கொள்கிறார் கோர்ப்பசேவ். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகள் தங்களது பழைய ஆயுதங்களின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ள மறுத்து விட்டன. பேச்சு வார்த்தைகள் மூலம் ஆப்கானி ஸ்தானில் அதிகாரப் பங்கீட்டைச் செய்து கொள்ளலாம் என்றார் கோர்ப்பசேவ். நிபந் தனையின்றிப் படைகளை அழைத்துக் கொள்ள வேண்டும் என்றது அமெரிக்கா. ரசியா பணிய வேண்டியதாயிற்று. அங்கோலா, மொசாம்பிக் போன்ற தனது ஆதரவு நாடுகளைக் கட்டாயப் படுத்தி உலக முதலாளி யச் சக்திகளுடன் ஒத்துப் போகச் சொல்கிறது ரசியா. அமெரிக்காவோத் தனது ஆதரவு நாடு களின் அடாவடித் தனங்களை ஊக்குவிப்பதைத் தொடர்கிறது. கம்போடியாவை விட்டு வியட் நாமை வெளிறேச் செய்தது ரசியா. அமெரிக் காவோ தொடர்ந்து போல்பாட்டையும் கேமர் ரூஜையும் ஆதரித்துவருகிறது. கியூபாவுக்கான மானியங்களையும் உதவிகளையும் நிறுத்திக் கொண்டது ரசியா. அமெரிக்காவோ தொடர்ந்து கியூபாவைப் பகைமையாகவே பார்க்கிறது. போலந்தின் கத்தோலிக்கச் சார்பான அரசை ரசியா ஏற்றுக் கொண்டுவிட்டது; அங்கு நடை பெற்ற தேர்தலில் முற்றிலுமாகத் தலையிடவு மில்லை. அமெரிக்காவோ, நிகரகுவா தேர்தலில் இடதுசாரிகளுக்கெதிராக எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. பணயக் கைதிகளை விடுதலை செய்யச் சொல்லி ஈரான்-சிரியா ஆகியவற்றிற்கு அழுத்தம் கொடுத்தது ரசியா. ஆனால் போர்க் கைதிகளை விடுதலை செய்யச் சொல்லி இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்கத் தயாராக இல்லை அமெரிக்கா. பனிப்போரை முடிவுக்குக் கொண்டு வந்ததன் மூலம் மூன்றாம் உலக நாடுகளை விருப்பம் போலக் கையாளும் சுதந்திரத்தை மேலை ஏகாதிபத்தியங்களுக்குத் தாரை வார்த்திருக் கிறது ரசியா. இப்படி நிறையச் சொல்லலாம். மேலை முதலாளியம் கோர்ப்பசேவைப் பிரபலப்படுத்துவதெல்லாம் பத்திரிகைகளில் தான். அரசியல் நடைமுறை என்பதென்னவோ ஒரு பக்கச் சரணாகதிதான்.

பு. பி. சமுதாயங்களின் இந்தச் சரணா கதிக்குப் பொதுவுடமைக் கட்சிகளை மட்டுமே காரணமாகச் சொல்லிவிட முடியாது. அங்குள்ள மக்களின் மனநிலையே அப்படித்தான் இருக் கிறது. மேற்கத்தியப் பண்பாடு, மதிப்பீடுகள், பொருளுற்பத்திமுறை ஆகியவை குறித்த கவர்ச்சி அங்கே தலைவிரித்தாடுகிறது. மேற்கி லுள்ள சகலத்தையும் மேலானதாகப் பார்க்கும் மனநிலை அங்கு ஏற்பட்டுப் போனதை நாம் மிகவும் கவனமாகப் பரிசீலிக்க வேண்டியவர் களாக இருக்கிறோம். எழுத்துரிமை, பேச்சுரிமை கருத்துக்களுக்காகப் போராடும் உரிமை, 'ஹேபியஸ் கார்ப்பஸ்' உரிமை போன்ற மிக அடிப்படையான மனித உரிமைகளும் அரசியல் உரிமைகளும் மறுக்கப்படுதல், நுகர் பொருட் களுக்கான நீண்டவரிசை, பற்றாக்குறை, அதிகார வர்க்கக் கொடுங்கோன்மை, சகலத்திலிருந்தும் அந்நியமாகி நிற்கும் பரிதாபம், தங்களது தேசிய இன உரிமைகளையும் இழந்து நிற்கும் வேதனை ஆகியவற்றோடு கடந்த பல

www.tamilarangam.net



பத்தாண்டுகளைக் கழித்தவர்கள் இந்த மக்கள். இந்தக் கொடுமைகள் அனைத்தும் மார்க்சிய-லெனினியப் பதாகையின் கீழ் சோசலிசக் கட்டுமானம் என்ற பெயரில்தான் நடைபெற்றன. ஒட்டுமொத்தமான அடித்தட்டு மக்களின் ஏக பிரதிநிதியாகியப் பொதுவுடமைக் கட்சியே மக்களின் நலனைப் பற்றிச் சிந்திக்க வல்லது; அதனைப் பலவீனப்படுத்துவது எதிரியைப் பலப்படுத்துவதற்குச் சமம் என்கிற அடிப்படையில் கருத்து மாறுபாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டன. கட்சித் தலைவர்களுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டன. கருத்து மாறுபடுகிறவர்கள் முதலாளிய ஆதரவாளர்கள் ஏகாதிபத்தியக் கைக்கூலிகள் என முத்திரை குத்தப்பட்டுக் குரல்வளை நெறிக்கப்பட்டனர். பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தின் (பா.வ.ச) பெயரிலேயே பாட்டாளிகள் சகல விதமான அதிகாரங்களிலிருந்தும் அந்நியப்படுத்தப்பட்டனர். இந்த நிலைமையில் இருக்கிற நிறுவன வடிவங்களுக்குள்ளும் தத்துவச் சட்டகத்திற்குள்ளும் தங்களது எதிர்ப்பை வடிவமைக்க முடியாத இம்மக்கள் பொங்கி வெடித்துச் சிதற ஒரு வாய்ப்புக் கிடைத்தபோது தங்களது ஆட்சியாளர் இது வரை பேசிவந்த மொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்ட இன்னொரு மொழியில் பேச நேர்ந்தது. மேலை முதலாளியம் வழங்கியுள்ள முதலாளியச் சனநாயக உரிமைகளில் மயங்கி,

முதலாளியக் கட்டுமானம் = சந்தைப் பொருளாதாரம் = சனநாயகம்

சோசலிசக் கட்டுமானம் = மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் = அதிகார வர்க்கமயமாதல் = சனநாயக உரிமைகள் பறிக்கப்படுதல் எனப் புரிந்து கொள்ள நேர்ந்தது.

இதைத்தான் இன்று மார்க்சியம் சந்தித்துள்ள நெருக்கடி என்கிறோம். இதன் எதிரொலி உலகெங்கும் மார்க்சிய-லெனினியப் பதாகையின் கீழ் மக்களைத் திரட்ட முனையும் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. இத்தாலியப் பொதுவுடமைக் கட்சியும், பு.பி. சமுதாயங்களிலுள்ள பல பொதுவுடமைக் கட்சிகளும் தங்களின் பெயரிலிருந்தே 'பொதுவுடமை' என்கிற சொல்லை நீக்கிவிட்டன. மொசாம்பிக்கில் வளர்ந்து வந்த ஒரு இடதுசாரி இயக்கம் தனது வழிகாட்டும் தத்துவம் மார்க்சியமல்ல என அறிவித்திருக்கிறது. மூன்றாம் உலக நாடுகளின் பல பொதுவுடமைக் கட்சிகள் வர்க்கப் போராட்டம் பற்றிப் பேசுவதை நிறுத்திவிட்டுத் தன்னுரிமை போன்ற முழக்கங்களை முன்வைக்கத் தொடங்கிவிட்டன.

இச் சூழலை எதிர்கொண்டுள்ள வகையில் உலகெங்கிலுமுள்ள மார்க்சியரை இருசாரராகப் பிரிக்கலாம்.

(அ) மார்க்சியம் காலாவதியாகிவிட்டது என வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் கருத்தியற் களத்தில் முதலாளியத்திடம் சரணாகதியடைவோர். இன்றைய நெருக்கடிகளுக்கு மையப் படுத்தப்பட்ட திட்டமிடுதலையும் ஸ்டாலினியத்தையும் காரணமாகக் காட்டி முதலாளியப் பாதையை நோக்கிச் சரிவதை ஆதரிக்கும் பெரிஸ்த்ரோய்க்கா ஆதரவாளர்கள் இவர்கள்.

(ஆ) மார்க்சியம் காலாவதியாகிவிடவில்லை. ஸ்டாலினுக்குப் பின் வந்தவர்கள் திரிபுவாதப் பாதையில் சரிந்ததே இன்றைய நெருக்கடிகளுக்குக் காரணம். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், மையப்படுத்தப்பட்டத் திட்டமிடுதல் போன்ற மரபு வழிப்பட்ட போல்செளசக் கருத்தாக்கங்களை விமர்சிப்போர் மார்க்சியத்தின் எதிரிகள், என்றெல்லாம் நம்புபவர்கள் இவர்கள். இவர்கள் பெரும்பாலும் தங்களை 'மாவோயிஸ்டுகள்' என அழைத்துக் கொள்கிறார்கள்.*

இரண்டாமவர்கள் கடந்த இருபதாண்டு காலமாகவே ரசியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோசலிசக் கட்டமைப்பிலிருந்து பாதை விலகி முதலாளிய மீட்சிக்கு ஆளாகிவிட்டன எனச் சொல்லி வருபவர்கள். ரசியா, சமூக ஏகாதிபத்தியமாகி மூன்றாம் உலக நாடுகளைச் சுரண்டுகிறது என்றும் நம்புபவர்கள். அரசியல்/ பொருளாதார / பண்பாட்டுத் துறைகளில் ரசியாவில் ஏற்பட்டுள்ள முப்பெரும் நெருக்கடிகளை, கடந்த பல ஆண்டுகளாகவே சுட்டிக் காட்டி வந்தவர்கள் என்கிற அடிப்படையில் இன்று ஏற்பட்டுள்ள கொந்தளிப்புகள் தங்களின் கருத்துக்களுக்கு ஒரு நிரூபணம் என்பது இவர்களின் வாதம். இந்த நெருக்கடிகளை அன்று இவர்கள் சுட்டிக் காட்டியபோது அமெரிக்க ஏஜண்டுகள் எனக் குற்றம் சாட்டிய முதலாமவர் இன்று எள்ளளவும் சுய விமர்சனமின்றி இதே கருத்துக்களை ஏற்றுக்கொண்டுள்ளது உண்மை தான்.

ஆனாலும் இன்றைய கொந்தளிப்புகளும் மக்கள் எழுச்சிகளும் மாவோயிஸ்டுகளை எந்த விதமான தர்ம சங்கடத்திற்கும் ஆளாக்கிவிடவில்லை என்றும் சொல்லிவிட முடியாது. ரசியாவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் திரிபுவாதத்திற்கு இழிய நேர்ந்ததைக் கணக்கிலெடுத்துக் கொண்டு முற்றிலும் புதிய ஒரு

*சோசலிசக் கட்டுமானம், கட்சியின் முன்னோடிப் பாத்திரம் ஆகியவற்றில் போல்செளசத்திலிருந்து கடுமையாக மாறுபட்டவர் மாவோ. ஆனால் மாவோயிஸ்டுகளாகத் தங்களை அழைத்துக் கொள்பவர்கள் கட்சியின் முன்னோடிப் பாத்திரம் போன்ற கருத்தாக்கங்களில் போல்செளச நிலைபாட்டையே மேற்கொள்கின்றனர் என்பது கவனிக்கத் தக்கது.

www.tamilarangam.net



சோசலிசக் கட்டுமானப் பாதையையும் கலாச்சார புரட்சியையும் மாவோ மேற்கொண்டதை விமர்சனங்களின்றி உயர்த்திப் பிடிப்பவர்கள் இவர்கள். எல்லாந்தான் செய்தாலும் மாவோவுக்குப் பிந்திய சீனமும் திரிபுவாதமாய்ச் சீரழிந்ததென்றால் உலகெங்கிலுமுள்ள பி. பு. சமுதாயங்கள் ஏதொன்றிலுமே சரியான சோசலிசக் கட்டுமானத்தை நிறுவ முடியவில்லையென்றால்—மார்க்சியத்தின் அடிப்படையிலேயே ஏதேனும் கோளாறு இருக்கிறதா, இல்லை எதார்த்தத்தில் கடைபிடிக்கவே முடியாத வெறும் கனவுதானா மார்க்சியம் என்கிற பாமர நியாயங்களுக்கு இவர்களிடம் பதில் இல்லை. ஆனாலும் மார்க்சியப் பதாகையின் கீழ் மக்களைத் திரட்டியாக வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் நாம் இந்த கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

இதற்கு முன் நாம் ஒருண்மையைத்தெளிவு படுத்திக் கொள்வோம். மார்க்சியம் உண்மையிலேயே காலாவதியாகிவிட்டால் நாம் அது பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை என்பதுதான் அது. காலத்தின் தேவையை ஒட்டியே எந்த ஒரு தீர்வும் உருவாகிறது. தேவை பூர்த்தி செய்யப்படும் போது அந்தத் தீர்வு தனது பயன்பாட்டை இழக்கிறது, ஏனெனில் அதன் பின் தோன்றுகிற புதிய பிரச்சினைகள் சகல அம்சங்களிலும் பழைய பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டிருப்பதால் பழைய தீர்வுகள் பயன்படாது போகிறது. இதனை மார்க்ஸ் மிகத் தெளிவாக உணர்ந்திருந்தார். நாம் அடைந்துள்ள அறிவுமட்டம் இறுதியானது அல்ல, நாம் எத்தனை மட்டங்களைத் தாண்டி வந்துள்ளோமோ அதுபோல நம்முடைய அறிவு மட்டமும் தாண்டப்படும். நாம் தாண்டி வந்தவை போலவே நம்முடையதும் தற்காலிகமானதே. நாம் எத்தனை தலைமுறைகளின் தவறுகளைத் திருத்தியிருக்கிறோமோ அவற்றைக் காட்டிலும் எண்ணிக்கையில் அதிகமான தலைமுறைகள் நம்முடைய தவறுகளைத் திருத்தும் என்றெல்லாம் சொன்னார். மார்க்ஸ். புனித வேதங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டுவது போல, எங்கள் புத்தங்களை வாய்ப்பாடுகளாக்கி விடாதீர்கள்; மார்க்சின் சிந்தனை முறையின் அடிப்படையில் பிரச்சினைகளை அணுகுவதே மார்க்சியம் என்கிற பொருள்பட மொழிந்தார் எங்கல்ஸ். ஆக, மார்க்சியத்தின் நோக்கம் பூர்த்தியாகி அதன் தேவை அழிந்திருந்தால் நாம் அதற்காக ஒப்பாரி வைக்க வேண்டியதில்லை. கடந்த ஐயாயிரம் ஆண்டு கால வரலாற்றில் ஒடுக்கப்பட்ட அடித்தட்டு மக்களின் விடுதலை பற்றிப் பேசிய, ஆய்வு செய்த, கோட்பாட்டுருவாக்கம் செய்த தத்துவம் மார்க்சியம். மனிதனை மனிதன், சமூகங்களைச் சமூகங்கள், நாடுகளை நாடுகள் சுரண்டுவதையும் ஒடுக்குவதையும் முடிவிற்குக் கொண்டுவருவதன் தேவையை வலியுறுத்திய சிந்தனை மார்க்சியம். தனது கால முதலாளியச் சமூகத்தை விஞ்ஞான பூர்வமாகப் பகுப்பாய்வு செய்து அதன் இயக்க விதிகளை வெளிப்படுத்திய ஆய்வுமுறை மார்க்சியம். சமத்துவமான உலகையும் சமத்துவமான மதிப்பீடுகளையும் இந்த அடிப்படையில் ஒரு புதிய மனிதனையும் ஒரு புதிய பண்பாட்டையும் உருவாக்குவதைப் பற்றிச் சிந்தித்த சிந்தனை முறை மார்க்சியம். மார்க்ஸ் காலத்திய சமூகம் இன்று பெரிய அளவில் மாறுபட்டிருந்தாலும், பிரச்சினைகளின் பரிமாணங்கள் வேறுபட்டிருந்தாலும் இன்றும் உலகளவில் உற்பத்தி முறை முதலாளியத் தன்மையிலானதாகவே இருக்கிறது. இன்றளவும் மார்க்சியம் கண்டு சொன்ன முரண்பாடுகள் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன. இந்த முரண்பாடுகள் நீடிக்கும்வரை மார்க்சியத்தின் தேவையும் நீடிக்கும். இதன் பொருள் மார்க்சுக்குப் பிந்திய நூறாண்டு கால வளர்ச்சியையும் கணக்கிலெடுத்துக் கொண்டு மார்க்சியக் கருத்துக்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்கிற உண்மையை மறுப்பதல்ல. தவிரவும், மார்க்சியம் காலாவதியாகிவிட்டதாகக் கூக்குரலிடும் யாரும் தங்கள் கூற்றை விஞ்ஞான பூர்வமான தர்க்க அடிப்படையில் நிறுவிவிடவில்லை, இதனைச் சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

—தொடரும்

# பாலம்

ஒவ்வொருமாதமும் பாலம் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்துக் கொண்டே வெளிவருகிறது. கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக பாலம் இருபது நாள் தாமதமாக வருகிறது. அடுத்தமாதம் எப்படியோ...? என்ற அச்சம் ஆசிரியர் குழுவினருக்கு உண்டு. தாமதமின்றி பாலம் வெளிவர வாசகர்கள், நண்பர்களிடமிருந்து ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பை நாடுகிறோம். விற்பனையான பிரதிகளுக்கு தொகையை அனுப்பி வையுங்கள். சந்தா சேகரியுங்கள்.

25 அருணாசலபுரம் மெயின் ரோடு, அடையாறு, சென்னை-20.

www.tamilarangam.net

# அன்புள்ள வின்சென்ட்

சுகுமாரன்

ஓவியங்களே வான்கோவை பெரும் கலைஞனாக இன்று அடையாளம் காட்டுகின்றன. அவரது பாணி பிரத்யேகமானது. பெரும்பாலும் வெளிப் புறக் காட்சிகள் பாலங்கள், படகுகள் தாங்கும் துறை, வெயில் ததும்பும் வயல்வெளிகள், நட்சத்திரங்கள் முனகும் வானம், சூரிய காந்திப் பூக்களின் மஞ்சள், இருளில் நிமிர்ந்த சைப்ரஸ் மரங்கள். இவை அனைத்திலும் வான்கோ கலையின் புதிரானஅழகும், எளிமையின் சாந்தமும், அந்த மனத்தின் ஒரு விள்ளலும் உயிர் வாழ்ந் தன. உருவச் சித்திரங் களில் மரபான விதிகளை மீறினார். யதார்த்தமான வர்ணங்களுக்குப் பதில், இயல்பற்ற வர்ணம், விவரணைகளுக்குப் பதில் உணர்ச்சியின் செறிவு எனத் தன் ஆளுமையை ஸ்தாபித்தார்.

**உன்னுடைய அழகான காது**

வின்சென்ட் அதீத பரவசத்துடன் வேலை செய்து வந்தார். படைப்புவேகமும், தீவிரமும், உணர்ச்சிகளின் அலைக் கழிப்பும், மதுப்பழக் கமும் அவரை உலுக்கின. மனத் தடுமாற்றத் திலும் கொண்டு தள்ளின. வான்கோவின் அந்நியத் தோற்றமும், தடுமாற்ற நிலையும் உள்ளூர் வாசிகளைப் பயமுறுத்தின. சித்தப் பிரமைக்கும், படைப்பு வேதனைக்கும் இடை யிலான ஆர்லே தெருக்களில் வின்சென்ட் நடமாடிக் கொண்டிருந்தார்.

மாடல்களுக்குப் கூலி கொடுக்கப் போது மான வசதி இல்லாமல் ஒரு உபாயத்தைக் கண்டு பிடித்தார். விபச்சார விடுதிகளில் நுழைந்து வெளியேறினார். எவராவது சிறு தொகைக்கு ஒத்து வந்து மாடலாக நிற்கக் கூடுமே! அங்கே தான் ரேச்சல் கண்ணில் பட்டாள். பதினாறு வயதுக் குழந்தை. உற்சாகவதி. தினமும் அவளைச் சந்திக்கப் பணமில்லாமற் போகவே வரைந்த ஓவியங் களைக் கொடுத்துவந்தார். அவளுக்கு வான்கோ வைத்த பெயர் 'சின்னப் புறா'. சின்னப் புறா வான்கோவிடம் நேசித்தது அவருடைய காது களைத்தான். வேடிக்கையாகச் சொல்லுவாள்.

பாரீசுக்கு வரும் முன்பே வின்சென்ட் நிறைய ஓவியங்களைத் தீட்டி முடித்திருந்தார். பலவும் ரியலிச பாணியில் அமைந்தவை. அடர்ந்தநிறங்களில் தீட்டப் பட்டவை. அவை அவரது பயிற்சிக் கால ஓவியங்கள். அவற்றில் வின்சென்டின் திறமை இருந்தது. அவரு டைய ஆன்மா இல்லை.

**பாரீசிலிருந்து வெளியே**

பாரீஸ் வாழ்க்கை வின்சென்ட் வான்கோ என்ற ஓவியனைக் கூர்மைப் படுத்தியது. சம காலக் கலைஞர்களான பிஸ்ஸாரோ, தூலே லோத்ர, ஶுசோ, பால செஸான், பால் காகின் ஆகியோருடன் தோழமை கொண்டார். ஓயாமல் விவாதங்கள், இலக்கிய அறிமுகங்கள், புதிய திட்டங்கள், அரைப்பட்டினி, தரித்திரம்-எனினும் ஒவ்வொருவரிடமும் ஒரு கனவு பிரகாசித்துக் கொண்டிருந்தது. எல்லோரையும் விட காகி னுடன் நெருக்கமாக உணர்ந்தார். இரண்டு பேருக்கும் பொதுவான இயல்புகள் இருந்தன. காகினும் வசதியான வாழ்க்கையையும், மனைவி மக்களையும் விட்டுவிட்டு ஓவிய வாழ்க்கைக்குத் திரும்பியிருந்தார்.

காகினுடைய நட்பு வின்சென்டின் ஓவியங் களிலும் ஊடுருவியது. இருண்ட நிறங்கள் மங்கி பிரகாச வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டது அதன் பிறகே. குறிப்பாக மஞ்சள் நிறம் வான் கோவின் பிரதான நிறமாக ஆனது.

பாரீஸ் வாழ்க்கை வான்கோவை மேலும் அமைதியற்றவராக ஆக்கியது. நாகரிக வாழ்க்கையின் ஆரவாரம் அவருக்கு உவப்பான தாக இல்லை. தவிர, அவர் எதிர்பார்த்த அங்கீகாரமும் அவருடைய கலைக்கு வாய்க்க வில்லை, அவருக்கு மட்டுமல்ல, சக கலைஞர் களுக்கும் அந்த நிராசை இருந்தது. வான்கோ பரபரப்பற்ற ஒரு இடத்தை விரும்பினார். அமைதியின் சமவெளியான ஓர் இடம். எளிமையின் இதயமான ஓர் இடம். அப்படி ஓர் இடத்தையும் கண்டடைந்தார். பிரான்சின் தென்பகுதியில் ஒரு கிராமம்—ஆர்லே. ஒருநாள் யாரோடும் சொல்லிக் கொள்ளாமல் அங்கே போய்ச் சேர்ந்தார்.

இங்கும் பட்டினியும், தரித்திரமும் தொடர்ந்தன. ஆனால் ஓவியப் பணி தீவிரம் பெற்றது. ஒரு நாளைக்கு பதினான்கு முதல் பதினாறு மணி நேர வேலை. வாரத்துக்கு மூன்று ஓவியங்கள். சில சமயம் ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட ஓவியங்கள். முற்றுப்பெற்ற எல்லா ஓவியங்களும் தியோவுக்கு அனுப்பப் பட்டன. இக்காலப் பகுதியில் தீட்டிய

www.tamilarangam.net



''உங்களிடம் பணமில்லா விட்டால் என்ன? இந்த அழகான காதை அறுத்துத் தந்து விடுங்கள்'' வான்கோ சிரித்துக் கொண்டு திரும்பி விடுவார்.

**காகின் வந்திருக்கிறான்**

தியோ திருமணம் செய்துகொண்டிருந்தார். பாரீஸ் ஓவியர்களுக்கு அவர் நம்பிக்கையின் எல்லை. சாமர்த்தியமான கலைப் பொருள் விற்பனையாளராக மாறியிருந்தார். வின்சென்ட் தனது கனவைப் பற்றி அவருக்கு எழுதினார். ''இம்பிரஷனிஷ்டுகளின் சமூகம் ஒன்றை அமைக்க முடியும் என்று நம்புகிறேன். அது நிலைபெற்றிருக்கும் காலமெல்லாம் நாம் தைரியமாக வாழ முடியும்; ஓவியம் தீட்ட முடியும். இலாபமும் நஷ்டமும் பொதுவாகப் பகிர்ந்து கொள்ளப்படும். கலைஞர்களின் அமைப்பை உருவாக்குவதைப் பற்றி நாம் சென்ற மழைக் காலத்தில் பேசினோமே!''

கலைஞர்கள் ஒன்று திரண்டு பணிபுரிந்தால் மனித குலத்துக்கு மகத்தான பங்களிப்புகளை வழங்க முடியும். அவர்கள் சேர்ந்து பணியாற்ற ஒரு குடியிருப்பு அவசியம். ஆர்லே அதற்கு முற்றிலும் தகுதியான இடம். வான்கோவின் கனவுக்கு அடிப்படை இழைகள் இவை. இந்த யோசனையைச் சொல்லி அழைத்தபோது பால் காகின் சம்மதித்தார். வான்கோ மகிழ்ச்சியில் திணறினார்.

தியோவுக்கு நம்பிக்கையுடன் எழுதிய கடிதத்தில் வான்கோ தனது சந்தோஷத்தைச் சித்தரித்தார். ''காகின் வந்திருக்கிறான். அவனுடைய ஆரோக்கியம் தேறியிருக்கிறது; நீ அவனுக்காகச் செய்த விற்பனை ஏற்பாடுகள் பற்றி அவனுக்கு மிகவும் திருப்தி. அவசியமான பொருட்கள் வாங்குவதற்கு அதன் மூலம் பணம் கிடைக்கும். அந்தச் சுமை உன் தோளை விட்டு இறங்கியதே. மனிதன் என்ற முறையில் காகின் எவ்வளவோ நல்லவன். நாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்தால் அநேக காரியங்களைச் செய்ய முடியும். காகின் இங்கிருந்து ஏராளமாக ஓவியம் தீட்டுவான். நானும்தான்.

''நான் நோயாளியாகப் போகிறேனோ என்று சிறிது காலம் முன்புவரை தோன்றியது. காகின் வருகைக்குப் பிறகு அது மாறி இருக்கிறது. பணச் செலவின் நெருக்கடி அதனால் உனக்கு ஏற்படக் கூடிய சிரமம்—இவற்றை யோசித்துத்தான் என் நோய் அதிகரித்தது. இனி அது போன்ற துன்பங்கள் மாறிவிடும்.

''ஆறு மாதங்களுக்குள் சொந்தமாக ஒரு ஸ்டுடியோவை உருவாக்க முடியும். அது நிரந்தரமானதாக இருக்கும். இங்கே வருகிற ஓவியர்கள் அதைத் தங்குமிடமாகக் கொள்ளலாம். என்னுடைய ஓவியமும், காகினுடைய ஓவியமும் ஒவ்வொரு மாதமும் உனக்குக் கிடைக்கும். உன் நிறுவனத்துக்கு வெளியே எங்கள் ஓவியங்களை விற்க வேண்டாம். என்னைப் பொறுத்தவரை இனிமேல் கூப்பிள்ஸின் படியை மிதிக்கப் போவதில்லை.

''நாங்கள் தொடர்ந்து வேலை செய்கிறோம். மாலையானதும் களைத்துச் சோர்த்து போகிறோம். அப்போது உணவு விடுதிக்குப் போவோம். இரவில் சீக்கிரமாகவே உறங்குகிறோம். இதுதான் வாழ்க்கை.

''காகினும் நானும் ஓவியக்கலை பற்றி காரசாரமாக விவாதிக்கிறோம். எங்களுடைய வாக்குவாதம் மின்சார ஓட்டம் போல, அது முடிவடையும் போது நாங்கள் ஓய்ந்து போன பாட்டரி போல ஆகி விடுகிறோம்.''

காகினுடைய வரவால் வான்கோவிடம் முளைத்த எதிர்பார்ப்பில் கனவின் மகிழ்ச்சி கலந்திருந்தது. எனினும் நடந்தது வேறு. இருவரும் வெவ்வெறு ஆளுமைகள், ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு துருவங்கள். வான்கோ மௌனி; காகின் அரட்டை வாய். காகின் விவாதங்களின் உச்சத்தில் உட்கார்ந்து கொண்டு, மௌனமாக நிற்கும் வின்சென்டைக் கேலிப் பொம்மையாக்கி விடுவார். வான்கோ தனது கலையின் போக்கைத் தானே அமைத்துக் கொண்டவர். காகின் தனது கருத்துக்களை அவற்றில் அத்துமீற விடுவதை விரும்பவில்லை. இருவருக்குமிருந்த நட்பில் புகை மூழத் தொடங்கியது. மெல்ல மெல்ல வான்கோவின் அடிமனதில் காகின் மீதான தோழமை நிற முதிர்ந்து, வெறுப்பின் நிழல் படியத் தொடங்கியது. ஒரு நாள் எல்லை மீறி சண்டையில் முடிந்தது.

காகினிடமிருந்து தியோவை ஆர்லேக்கு வரச் சொல்லி தந்தி பறந்தது. முன் தினம் வாக்குவாதத்திற்குப் பிறகு பகலில், வெளியில் உலாவிக் கொண்டிருந்த காகின் பின்னால் திரும்பிப் பார்த்தான். பைத்தியம் படர்ந்த கண்களுடன் கையில் சவரக் கத்தியுடன் வான்கோ. காகின் தன்னைக் கவனித்து விட்டதை உணர்ந்ததும் அவர் பின்வாங்கினார். மனக்குழப்பத்திலும் காய்ச்சலிலும் தத்தளித்து, வான்கோ தன்னுடைய காதை அறுத்து, ரேச்சலிடம் கொண்டு போய்க் கொடுத்தார். இம்சையான காட்சி அது. ரூலின் என்ற தபால்காரர் வின்சென்டை திரும்ப ஸ்டுடியோவுக்குக் கூட்டி வந்து சேர்த்தார். போலீஸ் தலையிட்டது. இரத்தம் வழிய மயங்கிக்கிடந்த வின்சென்டை மருத்துவமனையில் சேர்த்தனர்.

www.tamilarangam.net



ஓரளவு குணம் பெறும் வரை தியோவும், காகினும் உடனிருந்தனர். இரண்டு வாரங்களுக்குப்பின் வின்செண்டும் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். பிறகு இருவரும் பாரீஸ் திரும்பினர்.

## பூமியின் மையத்தில் இடி

மறுபடியும் தீவிர நிலையில் பணியில் ஈடுபட்டார். இப்போது உள்ளூர் மக்களுக்கு ஒரு துர்க்கனவாகத் தோன்றினார். இந்தப் பைத்தியம் எந்தச் சமயத்திலும் தங்களைத் துன்புறுத்தக் கூடும். எனவே அடைத்து வைக்கக் கோரி மேயருக்கு மனுக் கொடுத்தனர். வான்கோ என்ற, மனிதர்களின் சுவிசேஷகன் அவமானத்தாலும் வேதனையாலும் எரிக்கப்பட்டான். தியோவுக்கு எழுதிய கடிதம் அந்த வேதனையின் குமுறலைச் சொல்லுகிறது. ''ஒரு சகோதரனுக்கு மட்டுமே ஏற்படக் கூடிய கவலையைத்தான் உன் கடிதத்தில் பார்த்தேன். அதனால் என்னுடைய மௌனத்தை முடித்துக் கொள்வது என கடமை. முழுமையான சுய உணர்வுடன்தான் இதை எழுதுகிறேன். பைத்தியக்காரனின் கடிதமல்ல. நீ அறிந்த உன் சகோதரனின் கடிதம். இது நிஜம்.

''என்னை வெளியே விடக் கூடாது என்று அநேக ஆட்கள் மேயரிடம் மனுக் கொடுத்திருக்கிறார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னைப் பூட்டி வைக்கக் கட்டளை இட்டிருக்கிறார். அதனால் நான் இங்கே பாதுகாப்பிலிருக்கிறேன்; காவல்காரர்கள் இருக்கிறார்கள். நான் என்ன குற்றம் செய்தேன் என்று கூட நிருபிக்காமல் இதைச் செய்திருக்கிறார்கள். எனக்கு மனசாட்சியின் நீதிமன்றத்தில் சொல்வதற்கு நிறைய பதில்கள் இருக்கின்றன. நான் ரோஷப்படுவதில் அர்த்தமில்லை. எனக்கு நானே மன்னிப்பு வழங்கிக் கொள்வேனாயின் என்னைக் குற்றவாளியாக்குவேன், எனக்கு இது போதும். இதெல்லாம் உனக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

''ஒரு மனிதனுக்கு எதிராக, அதுவும் நோயாளியான மனிதனுக்கு எதிராக இத்தனை பேர் திரள்வது, பூமியின் மையத்தில் இடி விழுவது போல. தவிர, மனிதர்களுடன் அதிகமாக நட்புப் பாராட்டுவது முட்டாள்தனமாகவே முடிகிறது.

''தற்காலிகமாக என்னைப் பற்றி நீ மறந்துவிட வேண்டும். எனக்குத் தேவை சிறிது மன அமைதி. மேயரும், போலீஸ் இன்ஸ்பெக்டரும் என்னிடம் தோழமையுடன் தான் பழகுகிறார்கள். எல்லாவற்றையும் சரிப்படுத்த கூடுமானதைச் செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். நான் என்னைக் காயப்படுத்திக் கொண்டேன். ஆனால் பிறரிடம் அராஜகமாக நடந்து கொள்ளவில்லை. அதுவுமில்லாமல், இந்தச் செலவுகளை என்னால் தாங்கமுடியாது. இதையெல்லாம் அவர்களிடம் சொன்னேன். நான் ஏதாவது வேலை செய்து மூன்று மாதங்களாகின்றன. என்னைப் பூட்டிவைக்காமலும், துன்புறுத்தமாலும் இருந்தால் என்னால் வேலை செய்ய முடிந்திருக்கும்.

''இப்போது என்னை வெளியில் நடமாட அனுமதிக்கிறார்கள். வெளியே ஒரு புத்தகம் வாங்கினேன். இரண்டு அத்தியாயங்களை ஆவலுடன் படித்தேன். ஏதாவது படித்து வாரக் கணக்காகிறது. படிப்பு என்னுடைய நோயைக் குணப்படுத்த உதவும். பால்சாக்கின் இன்னொரு நாவலையும் படித்துக் கொண்டிருக்கிறேன். டிக்கன்ஸின் கிறிஸ்துமஸ் புத்தகங்களையும் படிக்கிறேன்.

''அன்புள்ள தியோ! என்னைப் பூட்டிவைக்க வேண்டிய தேவை இல்லாதபடிக்கு நோய் தீருமென்றே தோன்றுகிறது.''

## உடைந்த கனவு

ஆர்லேக்கு வரும் போது வின்சென்ட் வான்கோ போற்றிப் பாதுகாத்த நம்பிக்கைகள் இப்போது ஆவியாகிப் போயிருந்தன. அந்த ஊரில் அவருக்கு வாய்த்த நண்பன்-ரூலின் என்ற தபால்காரர். அவரும் இடம்மாறிப் போயிருந்தார். ஓவியர் குடியிருப்பு என்ற கனவும் பொசுங்கிப் போயிருந்தது. அதிக வேலை நரம்புகளைத் தளர்த்தி, வலிப்பு நோயாக மாற்றியிருந்தது. படைப்பு வேகம் மோதி மோதி மனம் சித்தப்பிரமைக்கு நெருக்கத்திலிருந்தது. ஆர்லேயை விட்டு வெளியேறி தியோவுடன சில நாட்கள் வசிக்க முடிவு செய்தார்.

தியோவின் குடும்பம் வான்கோவை பாதுகாப்பாக உணரச் செய்தது. தியோ, அவருடைய மனைவி ஜோஹன்னா இருவரும் வான்கோவை எவரையும் விடச் சரியாகப் புரிந்து கொண்டிருந்தனர். அவர்களுடைய குழந்தைக்கு அந்தப் புரிந்து கொள்ளலின் அடையாளமாக 'வின்சென்ட்' என்றே பெயரிட்டிருந்தனர். வான்கோ அங்கிருந்து புறப்பட்டு அவெர்ஸ் வந்து சேர்ந்தார். சிறு அறையில் வாசம். வழக்கம் போலவே தீவிர உழைப்பு.

''என்னுடைய மனத்தின் சமநிலைக்கு இப்போது கோளாறு எதுவுமில்லை. என்னால் முடிந்த வரை வேலை செய்கிறேன். என்னுடைய நோய் திரும்ப வந்து விடுமானால் நீ

www.tamilarangam.net



பொறுத்துக் கொள் என்னுடைய இப்போதைய நிலையைப்பற்றி யோசித்தால் பயமாக இருக்கிறது. சிந்தனைக் குழப்பம். நாம் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுமா? ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறேன்."

மனநலம் சிதைந்த நிலையில் வின்சென்டை விடுதியில் சேர்க்கவே தியோ வர நேர்ந்தது. அவருக்குச் சிகிச்சை அளித்த மருத்துவர் ஒரே ஒரு உபாயம் மட்டுமே வான்கோவை மீட்கும் என்று உறுதியாகச் சொன்னார். 'ஓவியம் தீட்டுவதை நிறுத்த வேண்டும்.' அன்றாட வாழ்வுடன் வான்கோ தொடர்பு கொள்ள இருந்த ஒரே செயல் அது மட்டுமே. எதன் பொருட்டு தனது வாழ்க்கையைப் பலியிட்டிருந்தாரோ அதற்கு எதிராகத் திரும்ப அவர் ஒப்புக்கொள்ளவில்லை. கலையின் அமைதிக்கும், வாழ்க்கையின் கொந்தளிப்புக்கும் நடுவில் அலைக்கழிந்தது அந்த இதயம்.

தியோ, டாக்டர் காஷே என்ற மருத்துவரின் பாதுகாப்பில் வான்கோவை ஒப்படைத்தார். ஆனால் சிகிச்சை செய்து மீட்கக்கூடிய தொலைவை அவர் கடந்திருந்தார். அந்தக் கொந்தளிப்பான நாட்களில் கூட இரண்டு செயல்களில் வான்கோ ஆறுதல் கண்டார். ஒன்று : ஓயாமல் ஓவியம் தீட்டுவது. இரண்டு : தியோவுக்குக் கடிதம் எழுதுவது.

"இங்கே நான் மிகுந்த துக்கத்தோடு இருக்கிறேன். எனது விவகாரம் - உங்களை உலுக்குகிற புயல். அதைப் பற்றியும் துக்கப்படுகிறேன். நான் என்ன செய்ய? முடிந்த வரைக்கும் அமைதியுள்ளவனாக முயற்சி செய்கிறேன். என் வாழ்க்கையின் அடிப்படையே அபாயகரமானது. என்னுடைய ஒவ்வொரு காலடியும் தடுமாறுகிறது. எனக்குப் பயமாக இருக்கிறது."

"இப்போதும் ஓவியங்களையும் வாழ்க்கையையும் நேசிக்கிறேன். ஆனால், எனக்கென்று ஒரு பெண்துணை இனி ஏற்படப்போவதில்லை. அதற்கான வயதும் கடந்து போயிருக்கிறது. இப்போது அப்படியான ஆசை இல்லை. ஆனால், அப்படி ஒன்று சாத்தியமாகாமற் போனதன் துக்கம் இப்போதும் இருக்கிறது. என்னை முழுமனத்துடன் ஓவியத் திரையில் அர்ப்பணிப்பது. அதுமட்டும்தான் இனி, இந்த வயதில் என்னால் முடியும். என்னுடைய வாழ்க்கையையும், சக சௌக்கியங்களையும் உருக்கி வார்த்தவையே என்னுடைய ஓவியங்கள்"

வின்சென்ட் தியோவுக்கு எழுதிய கடைசிக் கடிதம் இது. இதற்குப் பின் வந்த நாட்களில் அவர் மனப்புயலின் வேகத்தால் சிதைந்து கொண்டே வந்தார். அவரது கலையே அவருக்கு நோயும் மருந்துமாக இருந்தது.

ஒருநாள் மாலை நேரம். வெளியே போய்த் திரும்பிய வான்கோ தனது அறைக்குள் நுழைந்து பூட்டிக் கொண்டார். துப்பாக்கியால் மார்பில் சுட்டுக் கொண்டார். எனினும் உயிரின் கடைசி நிமிடம், சகோதரன் தியோவுக்காகக் காத்திருந்தது. மறுநாள் வந்து சேர்ந்த தியோவின் தோளில் சாய்ந்து அந்த வாழ்க்கை முடிவடைந்தது. காலத்தின் நிறமற்ற திரை மீது ஒரு சிவப்பு நிற ஓவியம் பதிந்தது.

## அன்புள்ள தியோ

வான்கோ என்ற கலை ஆளுமையின் வெளிப்பாடு இரண்டு முகங்கள் கொண்டது. ஒன்று : கோடுகளும் நிறங்களும் பிணைந்த ஓவியங்கள். மற்றது : அவரது கடிதங்கள். வின்சென்ட் தனது பத்தொன்பதாம் வயதிலிருந்து சகோதரன் தியோவுக்குக் கடிதம் எழுத ஆரம்பித்தார். முப்பத்தி ஏழாம் வயதில் இறக்கும் வரை, ஏறத்தாழ இருபது வருடங்கள் இந்தத் தொடர்பு தடைபடாமல் நீண்டிருந்தது. வாழ்க்கையின் அநேகமாக எல்லாத் தருணங்களையும், உணர்ச்சிகளையும், தனது மனதின் இன்னொரு பாதிக்குச் சொல்வது போன்ற உண்மையுணர்வுடன் எழுதப்பட்டவை அவை. சிறு வயதில் இழைந்து தொடர்ந்த சகோதரன், வான்கோ என்ற கலைஞனின் நிரந்தர அங்கீகரிப்பாளன், நண்பன், போஷகன் என்ற நிலைகளை மீறித் தனது மனசாட்சியின் பாதுகாவலனாகத் தியோவை ஒப்புக் கொண்டிருக்கிறார் வான்கோ. தியோ அதற்குப் பொருத்தமானவன். ஜோஹன்னா குறிப்பிட்டதாக ஒரு கடிதத்தில் எழுதினார். "உன்னைப் போலவே நானும் அமைதியற்றவன். கஷ்டங்கள் அனுபவிப்பவன். இது உனக்கும் தெரியுமென்று ஜோஹன்னாவின் கடிதம் தெளிவுபடுத்துகிறது- எவ்வளவு பெரிய ஆறுதல்."

அன்றாட வாழ்க்கையின் செயல்கள், கலை பற்றிய கனவுகள், திட்டங்கள், பிறரின் கலை பற்றிய கருத்துக்கள், பருவ காலங்கள், இயற்கைக் காட்சிகள், காதல், ஆசைகள், வேதனைகள், சந்தோஷங்கள், தோல்விகள், மனிதர்கள் என்று எல்லாவற்றைப் பற்றியும் எழுதப்பட்ட இக் கடிதங்களின் பரப்பும், உயிர்த் துடிப்பும், எழுத்தமைதியும், இலக்கியக் குணம் கொண்டவை. ஓர் அர்த்தத்தில் இவை வான்கோவின் நாட்குறிப்புகள். விரிந்தபார்வையில் வின்சென்ட் வான்கோ தன்னையறியாமல் எழுதி வைத்த சுயசரிதை.

www.tamilarangam.net



வான்கோ என்ற கலைஞனின் பேரன்பில் தியோவின் சமர்ப்பணமும் கலந்தே இருக்கிறது. வின்சென்டைத் தொடர்ந்து உற்சாகப்படுத்தி இயக்குவதற்காக தியோ, தனது சொந்த வாழ்க்கையைப் பலியிட்டிருந்தார். வின்சென்ட் இறந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு தியோவும் இறந்தார்.

### எளிமையின் கலை

வின்சென்ட் வான்கோவின் கலை, மனித குலத்துக்கு அவரது ஆத்ம சமர்ப்பணம். தனது வெளிப்பாட்டுச் சாதனத்துடன் அவர் கொண்டிருந்த அதீதமான உண்மை உணர்வு, அவரது படைப்புகளை அசாதாரணமான ஒத்திசைவு கொண்டவையாக மாற்றின. காலமும், பருவங்களும், இயற்கையும், ஒளியும், இருளும், வண்ணங்களும் மனித உணர்ச்சிகளுடன் பிரிக்க வியலாமற் கலந்தன. அவர் வாழ்ந்த வாழ்க்கைக்குள் தட்டுப்பட்டவையே அவருக்குக் கலைக்கான விஷயங்களாயின. எளிமையான கருப் பொருட்கள் அவற்றிலும் உணர்ச்சிகளைத் ததும்பச் செய்வதே வான்கோவின் நோக்கம். அறிவின் விவாதமல்ல;உணர்ச்சியின் சைகையே கலை என்று நம்பினார். "மனசாட்சியும் உணர்ச்சியுமே ஒரு கலைஞனை நடத்திச்செல்ல வேண்டியவை. அவனுடைய தூரிகையை இயக்குவது அறிவல்ல. தூரிகையே அறிவைச் செலுத்த வேண்டும். இதுவே எனது நம்பிக்கை."

எதார்த்தத்தின் மீது நாம் உருவாக்கியிருக்கும் பாதுகாப்பை ஊடுருவிச் சென்றதிலும், தன்னுடைய அக உணர்வுக்கு எதார்த்தத்தின் படிமத்தை வழங்கியதிலுமே வான்கோவின் கலை மகத்துவம் பெறுகிறது. கடிதம் ஒன்றில் குறிப்பிட்டார்: "ஒரு நல்ல ஓவியத்தைப் படைப்பது, முத்தையோ வைரத்தையோ கண்டெடுப்பதைவிட எளிதானதல்ல. அதே போல, சிரமப்பட வேண்டும்; வாழ்க்கையை நெருக்கடிக்கு உள்ளாக்க வேண்டும்".

அன்பு எளிமையானது; கலை அன்பானது. எனவே எளிமையான கலையே அன்பைச் சொல்லும். இந்தக் கண்ணோட்டத்திலேயே வான்கோ வாழ்க்கையையும் கலையையும் அணுகினார். அவரது உலகின் எளிய மனிதர்களும், எளிய பொருட்களுமே அவர் கலைக்குள் இடம் பெற்றன. சுரங்கத் தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளிகள், தபால்காரர், விலைமாதர், கூலிகள் என்று எளிய மனிதர்களும், வயல் வெளிகள், பாலங்கள், தோட்டங்கள், இரவு விடுதிகள், வசிப்பிடங்கள் என்று பொது இடங்களும், சூரியகாந்திப் பூக்கள், சைப்ரஸ் மரங்கள் காலணிகள், படுக்கை அறைப் பொருட்கள் என்று சாதாரணப் பொருட்களும், தான் உட்படத் தன் நண்பர்கள், தோழர்கள் சிலரது உருவச் சித்திரங்களும் வான்கோவின் ஓவிய உலகுக்கு இடம் பெயர்ந்தன. எந்தவிதமான சிறப்பியல்புகளும் இல்லாதவைஇவை. ஆனால் அவற்றுக்கு முக்கியத்துவம் கற்பித்தது அவரது கண்ணோட்டம்.

வின்சென்ட் வான்கோவின் நிகழ்காலம் ஒரு கூர்வாளாக, அவரது ஒவ்வொரு நம்பிக்கையையும் வெட்டி எறிந்து வந்திருக்கிறது. அவரது 'தீவிரமான கலை வாழ்க்கை' பத்து வருடங்கள் மட்டுமே. ஆனால் அதன் விளைவு அபரிமிதமானது. எண்ணூற்றுக்கும் மேற்பட்ட படைப்புகள். இந்தத் தீவிரமும் அதன் விளைபொருட்களும் அங்கீகரிக்கப் படவேயில்லை. ஒரே ஒரு ஓவியம் மட்டுமே விற்பனையானது. ஒரே ஒரு முறை ஒரு கட்டுரையில் குறிப்பிடப்பட்டார். அவ்வளவே! "எனது ஓவியங்கள் விற்பனையாகவில்லை என்பதற்காக நான் எதுவும் செய்ய முடியாது. ஒரு காலம் வரும்—வர்ணத்தின் விலையை விடவும் அவற்றுக்கு மதிப்பு அதிகம் என்று மக்கள் உணர்ந்து கொள்ளும் காலம்" என்று எழுதினார் வான்கோ. அந்தக் காலம் அவரது மரணத்துக்குப் பிறகு வந்தது. முன்பு செய்த புறக்கணிப்புக்குப் பிரதியாக பல மடங்கு ஆவேசத்துடனும், கோலாகலத்துடனும் வந்தது. நூறு வருடங்களைக் கடந்தும் நீடிக்கிறது. ஏனெனில், வின்சென்ட் வான்கோவின் கலை மனித வரலாற்றுக்கு அன்புப் பரிசாக வாய்த்த கௌரவம். □

## வின்சென்ட் வான்கோ

1853 மார்ச் 30 ஹாலந்திலுள்ள க்ரூட் சுண்டர்ட் என்ற இடத்தில் பிறப்பு

1857 மே 7 தியோ பிறப்பு

1878 சுரங்கப் பகுதியில் சுவிசேஷ போதகா

1881 ஹேகில் ஓவிய வாழ்க்கை

1886 பாரீசில் கலைஞர்களுடன் தோழமை

1888 மனநிலையின் தடுமாற்றம்

1890 ஜூலை 29 துப்பாக்கியால் சுட்டு தற்கொலை. □

www.tamilarangam.net

சந்தியா ராகம்

# அந்திமத்தில் சூர்யோதயம்

□ □ □ அம்ஷன் குமார்

இயக்குநர்களை, பிரான்ஸ்வா ஃட்ரூபோ, இரண்டு வகையாகப் பிரிக்கிறார்: பெரு வாரி யான ஜனங்களை மனதிற்கொண்டு படங்களை உருவாக்கும் இயக்குநர்கள் மற்றும் அவர் களைப் பொருட்படுத்தாது படங்களை எடுப் பவர்கள். முன்னதற்கு உதாரணமாக அவர் தரும் பட்டியல்—ஹிட்ச்சாக், ரென்வார் மற்றும் 'கிட்டத்தட்ட அமெரிக்க டைரக்டர்கள் அனை வரும்'. இரண்டாவதற்கு உதாரணமாக பிரஸ்ஸன், ரோஸலினி, நிகோலஸ் ரே போன் றோர். ஆனால் உன்னதங்கள் பலவும் வகைப் படுத்தலால் பிராந்தியங்களாய்ப் பிரிந்துவிடாது ஒரு மெல்லிய நீர்க்கோட்டினால்தான் வேறு பட்டு நிற்கிறார்கள்.

பிரஸ்ஸனைக் கண்டுகொள்வதாக சினிமா ரசிகர்கள் இருந்தார்கள் என்பதும் ரசிகர்களைக் கண்டுகொண்டவராக ஹிட்ச்சாக் இருந்தார் என்பதும் பிரமையே. பிரபல்யம் தரும் பிரமை இது. ரசிகனுக்குள்ளிருந்த ஹிட்ச்சாக்கை ஹிட்ச்சாக் வெளி கொண்டு வந்ததில் துரிதமும் ரசிகனுக்குள்ளிருந்த பிரஸ்ஸனை பிரஸ்ஸன் வெளிக்கொண்டு வந்ததில் தாமதமும் ஏற் பட்டது என்பதே உண்மை. இதற்கான காரணங்கள் காலம், இடம், பொருள் பற்றியவை.

பாலுமகேந்திரா—சிறந்த இந்திய டைரக் டர்களின் வரிசையில் இடம்பெற பிரக்ஞையுடன் பயணம் துவங்கியுள்ள பாலுமகேந்திரா-சினிமா சங்க அங்கத்தினர்களுக்கு சென்னையில் தனது சமீபத்திய தூர்தர்ஷனின் தயாரிப்பான'சந்தியா ராகத்தை', அவர்களது எண்ணங்களைக் கேட்டறிய வேண்டி போட்டுக் காட்டி னார். இதற்கு முன் இது போன்றே அவர் தனது 'வீடு' படத்தையும் சினிமா சங்கத்தின ருக்குப் போட்டுக் காட்டி அவர்களது எண்ணங் களைக் கேட்டறிந்திருந்தார். நிலை குத்திப் போன தமிழ் சினிமா ரசிகர்கள் வேறுபட்ட கோணத்திலிருந்து எடுக்கப்பட்ட தனது படங் களை எவ்வாறு ஏற்கக்கூடும் என்பதை சினிமா சங்க ரசிகர்கள் வாயிலாக ஒருவாறாக அனுமா னிக்கிற முயற்சிகள் இவை. மாறுதலான படத்தை எடுத்து அதற்குரிய வரவேற் பினை அறிய விழையும் பாலுமகேந்திரா ஃட்ருபோவின் அதே நீர்க்கோட்டால் மேலும் பிரிபடும் மூன்றாம் வகை டைரக்டர்களுள் இடம் பிடிப்பவராகிறார்.

திரையிடலுக்குப் பின்னர் அரங்கத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பாலுமகேந்திரா நெஞ்சை நிமிர்த்திக் கொள்ளாமல் சகஜ பாவத் துடனும் பொறுப்புடனும் பதில்களைத் தந்தார். சுட்டிக்காட்டப்பட்ட தவறுதல்களை ஒப்புக் கொண்ட அவர் 28 நாட்களுக்குள் படம் எடுக்க வேண்டியிருந்த கால திர்பந்தத்தை அவற்றிற்கு ஒரு காரணமாகக் கூறினார்.

பாலுமகேந்திரா 'சந்தியா ராக'த்திற்கு பிறகு தமிழ் டைரக்டர்களில் சிறப்பான, இது வரை எவரும் கொண்டிராத இடத்தைப் பெற் றுள்ளார். தமிழில் தொடர்ந்து அர்த்தமுள்ள இரு படங்களை டைரக்ட் செய்துள்ள ஒரே டைரக்டர் அவர். இதற்குமுன் அர்த்தமுள்ள படங்களை எடுத்தவர்கள் தலா ஒரு படத்துடன் தங்கள் பணியினை நிறுத்திக் கொண்டனர். நிமாய்கோஷ் (பாதை தெரியுது பார்), ஜெயகாந்தன் (உன்னைப் போல் ஒருவன்), ஜானி ஆபிரஹாம் (அக்ரகாரத்தில் கழுதை), ருத்ரைய்யா(அவள் அப்படித்தான்), மகேந்திரன் (உதிரிப் பூக்கள்). இங்கு குறிப்பிடப்பட்டவர் களில் வித்தியாசமாயும் ஓரளவு ஜனரஞ்சக மாயும் படம் எடுத்த நிமாய்கோஷ், ருத்ரைய்யா ஆகியோரைக் காட்டிலும் மேலும் வித்தியாச மாகவும் அதிக ஜனரஞ்சகமாகவும் தனது படங் களை எடுப்பவர் பாலுமகேந்திரா. அதே சமயம் அவர் மகேந்திரனைப் போல் ஜனரஞ்ச கம் வேண்டி ஒவ்வாத கற்பனைத் தீர்வுகளுக்கு பலியாகவுமில்லை.

ஆனால் 'வீடு' படத்தில் அவர் காட்டிய சிரத்தை 'சந்தியா ராகம்' படத்தில் எல்லா வகைகளிலும் குறைவாகத் தென்படுகிறது.

வீடு பிரச்சினை பற்றிய மற்றொரு படமாக வும், ஏற்கனவே தான் எடுத்த 'வீடு' படத்தை நினைவுபடுத்துகிற மாதிரி சந்தியாராகத்தை எடுத்துள்ளார். அதே வீடு. அந்த வீட்டு முற்றத்தின் அதே ஹை ஆங்கிள் ஷாட்.

சொக்கலிங்க பாகவதர் சொக்கலிங்க பாகவதராக இரண்டாம் முறையும் நன்றாகவே நடித்துள்ளார். அவருக்கு தமிழ் சினிமா நடிப் புலகில் அலாதியான இடம் உண்டு. தமிழ்

www.tamilarangam.net



சினிமா நடிப்பை திட்டவட்டமாக மூன்று தலை முறை குணாதிசயங்களுடன் பிரித்துப் பார்க்க முடியும். நான் தலைமுறை என்னும் சொல்லை ஒரு முப்பது வருடகால அளவினது என்று ஆக்ஸ்ஃபோர்டு அகராதி தரும் அர்த்தத்தில் புழங்குகிறேன். முதல் தலைமுறை பாடுகின்ற நடிகர்களைக் கொண்டது. பி. யு. சின்னப்பா, தியாகராஜ பாகவதர், கே. பி. சுந்தராம்பாள் ஆகியோர் சொந்தக் குரலில் பாடினார்கள். ஆனால் அவர்கள் மரப்பாச்சித் தனம் வாய்ந்த நடிகர்களாக இருந்தார்கள். இரண்டாம் தலைமுறை மிகைப்படுத்தலான நடிப்பில் சிவாஜி கணேசனிடம் உச்சம் பெற்று அவரது பாதிப்பினை (எம்.ஜி.ஆர் நீங்கலாக) சகல நடிகர்களிடமும் வெளிக் கொணர்ந்தது. தற்போதைய மூன்றாம் தலைமுறை தமிழ் சினிமா ஒப்புக்கொள்கிற அளவில் காஷுவலாக நடிக்கிற பாணியைக் கொண்டுள்ளது. மூன்று தலைமுறை காலத்து மனிதரான சொக்கலிங்க பாகவதர் சொந்தக் குரலில் பாடி முதல் தலைமுறையையும், மிகைப்படுத்தாது நடிப்பதன் மூலம் மூன்றாம் தலைமுறையையும் ஒரு சேர தன்னுள் கொண்டிருக்கிறார். ஆனால் அவர் வாழ்வின் பெரும்பகுதியை இரண்டாம் தலைமுறை காலத்து நடிப்பினைக் கொண்டவராகத் தான் இருந்திருக்கக்கூடும். இப்படத்தில் தன்னுடைய முந்தைய நாள் நடிப்பினை அவர் ஒரு மாதிரிக்காக செய்து காட்டியிருப்பதை வைத்து நாம் இக்கூற்றை ஊர்ஜிதம் செய்து கொள்ள முடியும்.

'வீடு'வில் சிறிதாக வீடு கட்டி பெருவாழ்வு தனது சந்ததி வாழப்போவதாக எண்ணி மரித்த அவர், சந்தியாராகத்தில் கடைசி காலத்தில் புகலிடம் தேடும் அனாதரவான மனிதராக வருகிறார். காலைப் பிடித்துவிட்டுக் கொண்டு உடனே நடமாட ஆரம்பித்துவிடுவது சிறு வயதினரைப் போல சில்லாக்கு விளையாடுவது, சில்லு ஓடுகளைக் குட்டை நீர்ப்பரப்பில் தத்திச் செல்லுமாறு எறிவது போன்ற காரணிகள் அவரிடம் இருப்பதனால்தான் நகரத்தில் முற்றிலும் புதிய சூழ்நிலையிலும் அவரால் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ள முடிகிறது என்று வைத்துக் கொண்டாலும் கூட அவரது கதாபாத்திரம் பூர்த்தியாகவில்லை. தனக்கு வரும் பிரச்னைகளை வெகு சுலபமாக கீழே அடித்துத் தள்ளிவிடுகிற அப்பாத்திரத்திற்கு மேலும் ஆழம் தேவைப்படுகிறது. அதைத் தருவதற்கு பதிலாக பாலு அவரை அதிர்ஷ்டக்காரராக(!) மாற்றி விடுகிறார். வயதான மனிதரான அவருக்கு வயதான மனிதனின் பிரச்னைகளைத் தராததன் மூலம் வயதான மனிதனின் பிரச்னையின் உருவகமான மற்றொரு ஜீவனை-கால் ஊனமான கிழவரை-துணைப்பாத்திரமாகக் காட்டியுள்ளார். சொக்கலிங்க பாகவதர் நகரத்தில் படுகிற கஷ்டங்கள்-இடப் பற்றாக்குறை, தண்ணீர் பிரச்னை, போக்குவரத்து நெருக்கடி போன்றவை நகரத்திலுள்ள அனைவரும் எதிர்கொள்பவை. அதில் வயது, பால் பேதங்கள்எழுவதில்லை. அவற்றை பாகவதர் தனது அந்திம காலத்தில் அனுபவிக்கிறார்என்பதால் அவை வயோதிகரின் பிரச்னைகளாக ஆகிவிடா. மிக சுலபமாக அவர் முதியோர் இல்ல வாழ்க்கையுடனும் ஒன்றிவிடுகிறார். முதியோர் இல்லத்தை நம்பிக்கைதரும் ஒளியில் காட்டியதற்காக பாலுமகேந்திராவிற்கு முதியோர் இல்ல நிர்வாகிகள் நன்றிக் கடன்பட்டிருக்கிறார்கள். இதன் விளைவாக சிறைச்சாலையை கல்விக் கூடமாகக் காட்டுகிற நமது படங்கள் இனிமேல் முதியோர் இல்லத்தை முதியவர்களின் சொர்க்கபுரியாக சித்தரிக்க முயலக்கூடும்.

பிற கதாபாத்திரங்களும் நிறைவாக வில்லை. வீர. சந்தானம் இதில் அச்சக சூபர்வைஸராக வருகிறார். முதன் முதலாக படத்தில் நடித்துள்ள வீர. சந்தானம் ஓர் ஓவியர். ஒரே ஒரு ஷாட்டில் மட்டும் அவர் ஓவியராக காட்டப்பட்டுள்ளார். ஓவியர் காக்கி நாடனை அரவிந்தன் 'எஸ்தப்பன்' படத்தில் நடிகராயும் சித்திரங்கள் வரைபவராகவும் பயன்படுத்தியதைப் போல பாலுமகேந்திரா வீர. சந்தானத்தை பயன்படுத்த நினைத்து, பின்னர் ஏதோகாரணங்களால் மனதை மாற்றிக் கொண்டாரோ என்னவோ. வீர. சந்தானம் நூலறுந்த பட்டம் போல் பாதிப்படத்திலேயே தொடர்பற்றுப் போய்விடுகிறார். அழுவதற்கென்றே அர்ச்சனா! தமிழ்ப்பட கதாநாயகி அழுது தீர்க்க வேண்டும் என்ற விதியை பாலு! நீங்களாவது மாற்றியமைக்கக் கூடாதா?

'வீடு' படத்தில் பயன்படுத்தப்பட்டிருந்த இளையராஜாவின் (ஆல்ப) இசை அப்படத்தின் கதையோட்டத்தை உணர்த்துவதாக இருந்தது. ஆனால் டி. வி. தொடர்களுக்கு, நினைவில் கொள்கிற வகையில் முத்திரை சங்கீதம் (Signature tune) இயற்றும் எல். வைத்திய நாதனின் பின்னணி இசை இப்படத்தில் சோபிக்கவில்லை.

கிராமத்திலிருந்து பெயர்ந்து வந்துவிட்ட வயோதிகருக்கு கரம் நீட்டி இல்லம் தந்திருப்பது நகரம் என்பது படத்தின் இழிவரல் நமது படங்கள் அகில இந்திய அளவில் கிராமத்தை உயர்த்தியும் நகரத்தைத் தாழ்த்தியும் தொன்று தொட்டு காட்டி வந்துள்ளன. சந்தியாராகம் விதிவிலக்கல்ல. நகரத்தைக் கூட்டாமலும் குறைக்காமலும் அதன் சாத்தியங்களையும் குறைபாடுகளையும் உணர்த்தி எடுக்கப்பட்ட ஒரு படம் ராயின் 'மஹாநகர்'. இன்னொன்று இனிமேல் தான் எடுக்கப்பட வேண்டும். □

www.tamilarangam.net

முதல்வர் கருணாநிதி அவர்கள் நிருபர்கள் மத்தியில் பேசும்போது ஈழத்திலிருந்து உயிர் தப்பிவரும் தமிழ் அகதிகள் குறித்துக் கூறியது விஷயமறிந்தோர் பலரையும் வியக்க வைத்துள்ளது.

ஈழத் தமிழ்ப் பேசும் மக்கள் படும் துயரங்களுக்கு ஓரளவிற்கேனும் முடிவுகட்டும் முகமாக, ஐ.நா அகதிகள் நலக் கமிஷனின் உதவியை நாடுவது என்பதுதான் அது. அவரது இந்தக் கருத்து இந்தியாவிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் யோசிக்க வைத்துள்ளது.

ஐ.நா அகதிகள் நலக் கமிஷன் (United Nations High Commissioner for Refugees (UNHCR) துவக்கப்பட்டது 1951ல் தான். இரண்டாம் உலகப்போரின் விளைவாக ஐரோப்பிய நாடுகளிலிருந்து விரட்டப்பட்ட, வெளியேறிய மக்களுக்கு உதவும் பொருட்டு உருவாக்கப்பட்டதே இந்த அமைம்பு. தற்போது எல் சல்வடார், ஆப்கான், பாலஸ்தீனம், சைப்ரஸ் போன்ற நாடுகளின் அகதிகள் உட்பட உலகம் முழுவதும் அகதிகளாக்கப்பட்டுள்ள 1½கோடி அகதிகளைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு இந்த அமைப்பிற்கு உள்ளது.

சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனீவாவைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் இதன் அலுவலத்தில் 2000 பேர் உலக அகதிகளுக்காகப் பணியாற்றுகிறார்கள். ஏறத்தாள 80க்கும் மேற்பட்ட நாடுகளில் இந்த இயக்கம் செயல்பட்டு வருகிறது.

முதலாவதாக அகதிக[illegible] [illegible]துகாப்பதும், பின்னர் சம்பந்தப்பட்ட ந[illegible]களில் அமைதியான சூழல் திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுமே இதன் பிரதானப் பணி. அகதிகளின் நல்வாழ்விற்கும், பாதுகாப்பிற்கும், சுதந்திரத்திற்கும் எந்தவித தீங்கும் ஏற்படா வண்ணம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாய் உள்ளது.

## UNHCRம்

## இந்திய அரசும்

குண்டு வீச்சுக்களாலும், வரைமுறையற்ற கைதுகள், சித்ரவதைகளாலும் சீரழிக்கப்பட்டு பல்வேறு நாடுகளுக்கு அடைக்கலம் தேடிச் செல்லும் அகதிகளுக்கு முறையான மருத்துவ சிகிச்சை தேவை என்பதை மிகவும் வலியுறுத்துகிறது இந்த அமைப்பு.

முந்தைய காங்கிரசு ஆட்சிக் காலத்தில் இந்த அமைப்பில் கையெழுத்திட்டு உறுப்பினராகும்படி பல்வேறு சமயங்களில் எடுத்துக் கூறப்பட்டும் மறுத்து விட்டதற்குப் பல்வேறு அரசியல் பின்னணி இருப்பது புரிய வரும். UNHCRல் கையெழுத்திட்டுவிட்டால் பின்னர் அகதிகளைப் பராமரிக்கும் பொறுப்பும், (முறையான கல்வி, வேலைவாய்ப்பு உட்பட.) அனைத்து பணிகளும் UNHCRக்குச் சென்றுவிடும். அதன் பின்னர் அகதிகள் பேரைச் சொல்லிக் கொண்டு 'கட்டைப் பஞ்சாயத்து' செய்ய வகையற்றுப் போய்விடும் என்பதும், அகதிகள் வருகையைக் காரணம் காட்டி 'வசதிக்குத் தகுந்தபடி' ஈழமக்களைக் காப்பாற்றும் பொறுப்பில் உள்ள போராளிகள் விஷயங்களில் 'மூக்கை நுழைக்க' வகையற்றுப் போய்விடும் என்பதுமே ராஜீவ் அரசு கையெழுத்திடாததற்குப் பிரதான காரணங்களாகும். (இதைவிட வேடிக்கை என்னவெனில் இந்தியாவைக் காட்டிலும் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்துள்ள நாடுகள்கூட அகதிகள் பிரச்சனையைப் பொருளாதார ரீதியாகச் சமாளிக்க முடியாது என்றுகூறி UNHCRல் கையெழுத்திட்டுள்ளதுதான்.)

தமிழக முதல்வர் UNHCRஐ உதவிக்கு அழைப்பதுபற்றி, இந்தியப் பிரதமர் வி.பி.சிங்கிற்குக் கடிதம் எழுதியுள்ளது ஈழப்பிரச்சனையில் மிக முக்கிய திருப்புமுனையாக அமைந்துள்ளது. ஆனால் UNHCRன் நிவாரண முகாம்களை இந்தியாவில் அமைக்கும்படி வலியுறுத்தினால் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிக்கப்பட்டு இருக்கும் தமிழர்களுக்கு ஆறுதலாகவும், அவர்களது நியாயமான உணர்வுகளுக்குத் தமிழகம் தொடர்ந்து ஒத்துழைப்பு நல்கும் வண்ணமும் இருக்கும்.

எனவே இப்பொழுதாவது இந்திய அரசினை UNHCRல் கையெழுத்திடும்படி வலியுறுத்துவதே தற்போது தமிழ்நாடுமக்களின் முன்னுள்ள முக்கியக் கடமையாகும். ☐

**பாமரன்**

www.tamilarangam.net



# பாரதி வழியில் பாவேந்தர்?

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும் செம்மலர் ஆசிரியருமான தோழர் கே.முத்தையா செம்மலர் 1990 ஏப்ரல் இதழில் ''தேசிய கவி பாரதி வழியில் பாவேந்தர் பாரதிதாசன்'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைந்துள்ளார். இக் கட்டுரை தொடர்பாக 24-4-1990இல் நான் அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அக் கடிதத்தை செம்மலரில் வெளியிடுமாறு கேட்டுக் கொண்டேன், நான் எழுப்பிய பிரச்சினை பாவேந்தரைப் புரிந்து கொள்வதில் ஜீவாதாரமான ஒன்று என்பதாலும், நானும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் ஓர் உறுப்பினன் என்பதாலும் எனது கடிதத்தை வெளியிடுவது ஓர் ஆரோக்கியமான விவாதத்துக்குத் தூண்டுதலாய் அமையும் என்பதாலும் செம்மலர் என் கடிதத்தை வெளியிடும் என எதிர்பார்த்தேன். ஆனால் செம்மலர் ஆசிரியர் குழு எனது கடிதத்தை செம்மலரில் வெளியிடுவதில்லை என்று தீர்மானித்து விட்டதாக என்னிடம் ஒரு மாதம் முன்பு தெரிவிக்கப் பட்டது.

இடம் கருதி முழுமையாக வெளியிட முடியாது போயிருந்தால் என் கடிதத்தின் சுருக்கத்தையாவது செம்மலர் வெளியிட்டிருக்கலாம். எப்படியிருப்பினும் பாவேந்தரைப் பற்றி ஒரு சரியான புரிதலை அடைவதற்கு இந்த விவாதம் பயன்படுமெனக் கருதி, தோழர் முத்தையாவின் கட்டுரையையும் [விவாதப் பொருளுக்குத் தொடர்பில்லாத சில பகுதிகள் நீங்கலாக] நான் அவருக்கு எழுதிய கடிததையும் பாலம் வாசகர்களின் பார்வைக்குச் சமர்ப்பிக்கிறேன், இந்த விவாதத்தில் பங்குகொள்ள வருமாறு அக்கறையுள்ள ஒவ்வொருவரையும் அன்போடு அழைக்கிறேன். (தியாகு)

## தேசிய கவி பாரதி வழியில் பாவேந்தர் பாரதிதாசன்

**கே. முத்தையா**

தமிழகத்தில் தோன்றிய இரு பெரும் கவிஞர்களில் பாரதி முதல்வர்; அந்த பாரதியின் பெயரை தன் பெயருடன் இணைத்துக் கொண்ட பாரதிதாசன் அடுத்தவர். யாராவது பாரதியைச் குறை சொல்லிவிட்டால் போதும், பாரதிதாசனுக்கு கடும்கோபம் வந்துவிடும். பாரதி ஒரு கவிஞரா! மகா கவிஞரா! உலகக் கவிஞரா! என்று பிரமுகர் ஒருவர் கேட்டு எழுதி விட்டார். அதற்கு பாரதிதாசன் பதில் கூறுகிறார் :

''பாரதியார் உலக கவி!" — அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோய்!
ஒருருக்கொரு நாட்டுக்குரியதான
ஓட்டைச்சாண் நினைப்புடையர் அல்லர் மற்றும்
வீரர் அவர்!—மக்களிலே மேல் கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும் என்போர்!
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க்கின்ற
செம்மை நலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்"

''குறுகிய புத்தியுடையவர் அல்ல பாரதியார்! அவர் சுதந்திரப் போராட்ட வீரர்......

''பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்
சே"யென்ற பாரதியார் பெற்ற கீர்த்தி
போய்ப்பாழும் கிணற்றினிலே விழாதா என்று
பொழுதெல்லாம் தவங்கிடக்கும் கூட்டத்தார்கள்
வேர்ப்பார்கள்; பாரதியார் வேம்பென் பார்கள்;
வீணாக உலககவி அன்றென்பார்கள்;
ஊர்ப்புறத்தில் தமக்கானஒருவனைப் போய்
உயர்கவிஞன் என்பார்கள் வஞ்சகர்கள்"

பாரதியார் மேல் சிலருக்கு கோபம் வந்தது ஏன். தெரியுமா? என்று கேள்வி எழுப்புகிறார் பாரதிதாசன்.

''சாதிகள் இல்லையடி பாப்பா!" என்றார்
''தாழ்ச்சி உயர்ச்சிகள் சொல்லல் பாவம்" என்றார்
சோதிக்கில் ''சூத்திரற்கோர் நீதி தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறோர் நீதி"
ஓதியதைப் பாரதியார் வெறுத்தார். நாட்டில்
''ஒடுக்கப்பட்ட நிலைக்கு வருந்தி நின்றார்.
பாதிக்கும்படி ''பழமை பழமை என்பீர்
பழமை இருந்திட்ட நிலை அறியீர்" என்றார்

☐ செம்மலர் இதழ்க் கட்டுரை

www.tamilarangam.net



''சேரியிலே நாள் முழுதும் தங்கியுண்டார். காசு தந்து கடைத்தெருவில் உள்ள முஸ்லீம்
சோதரரின் கையால் வாங்கியதனை ''கனிவாய் உண்டார்''
(இப்படி நடந்து கொண்டதால் அவரை சில பேர் ஏசினார்கள் பேசினார்கள்.)
அவர்களின் வசை மொழியைப் பொறுத்தார். பிறப்
பினால் உயர்வு தாழ்வு சொல்லும் மோசத்தை
தன்னெழுத்தால், பேச்சால் நடத்தையால்
பறைசாற்றினார், அதனால் அவருக்கு வறுமை
தான் வந்தது. அதையும் ஏற்றார். (ஐயகோ
வையகத்து மாகவிஞர் மறைந்துபோனார்)
''அவரையிப்போ சில பேர் உலக கவி அல்லர்
அவர் எனத் தொடங்கி அய்யர் கவிதைக்கு
இழுக்கும் கற்பிக்கின்றார். அழகாக முடிச்
சவிழ்த்தால் விடுவாருண்டோ?''

என்று மறுப்புக் கூறுகிறார்.

ஆனந்த விகடனில் ர. கி. (கல்கி), பாரதி உலக கவி அல்ல என்றும், அவரது பாடல்களில் வெறுக்கத்தக்கவை உள்ளன என்றும், எழுதிய தற்கு மறுப்புக் கூறி வந்தது பாரதிதாசனின் மேற்கண்ட பாடல்! பாரதியின் மேன்மையை வெகு நாட்களாக கல்கி போன்றவர்கள் ஏற்க வில்லை. காரணம், தமிழ் இலக்கியத்தில் பழமை வாதங்களை நிராகரித்து புதுமையான முற்போக்கான தடம் பதித்தவர்என்பதால். இது மட்டுமல்ல, மறுபுறத்தில் திராவிட இயக்கத் தைச் சார்ந்தவர் என்று சொல்லிக்கொண்ட சிலர், 'இவன் ஒரு பார்ப்பன கவிஞன்' என்று முத்திரை குத்தி இழிவாகப் பேசினர்; ஏசினர்! ''மகாகவி'' என்ற தலைப்பில் பாரதிதாசன் இந்தக் கவிதையை எழுதிய பின்னர்அவர்களின் ஏச்சுப்பேச்சு குறைந்தது. முற்றாக ஓயவில்லை. இன்றைக்கும் கூட அதே சாயத்தைத்தான் பூச முயலுகின்றனர் சிலர். அவர்கள் மீண்டும் பாவேந்தர் பாரதிதாசனின் இந்தப் பாடலைப் படித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

இந்தப் பாடலிலிருந்தே பாரதிதாசனின் சிந்தனையும் கொள்கையும் என்னவென்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ''அகத்திலே அன்பும், பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும், கொண்ட சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க் கின்ற செம்மையெல்லாம் அவர் பாற் கண்டோம்'' என்று பாரதியை புகழ்ந்துரைக் கிறார்... ...

சுதந்திரப் போராட்ட காலத்தில் பாரதி தாசனின் கவிதைகளிலே மிகச் சிறந்த கவிதை என்று ஒரு பாட்டைப் பொதுக்கூட்டங்களில் பாடுவதுண்டு.

''சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள்வெட்டி
கருவியெலாம் செய்துதந்தகைதான் யார் கை?
பொற்றுகளைக் கடல் முத்தை மணிக் குலத்தைப்
போயெடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?''

இந்த ஆவேசக் கேள்விகளில் உழைப் பவனை—இந்த நவீன உலகத்தை உருவாக்கி யவனை தேசியக் கவி பாரதி எவ்வாறு பார்த் தானோ அதே பார்வையில் பார்க்கிறார் பாரதி தாசன். இரும்பைக் காய்ச்சி உருக்கி, எந்தி ரங்கள் வகுத்து, கரும்பைச் சாறு பிழிந்து, கடலில் மூழ்கி நன்முத்தெடுத்து... ஆயிரம் தொழில் செய்கிறார்களே அவர்கள் செய்யும் தொழில் 'பிரம்மதேவன் கலை' என்று வர்ணித்து அவர்களுக்கே பெரும் புகழ் இசைக் கின்றான் பாரதி. அந்தக் கருத்தைப் பாரதி தாசனும் முழுமையாக ஏற்றுக் கொண்டு இன்னும் ஒரு அடி மேலே செல்கிறார்.

''உடலைக் கசக்கி, உதிர்த்த வியர்வையின்
ஒவ்வொரு துளியிலுங் கண்டேன்
இவ்வுல குழைப்பவர்க்குரியதென்பதையே''

இந்தக் கருத்தைச் சொன்ன பிறகு ''உலகப்பன்'' பாட்டில்,

''கைத்திறனும் வாய்த்திறனும் கொண்ட பேர்கள்
கண்மூடி மக்களது நிலத்தையெல்லாம்
கொத்திகொண் டேப்பமிட்டு வந்ததாலே
கூலிமக்கள் அதிகரித்தார் என்ன செய்வேன்?''

சரி. இந்த நிலைமைக்கு முடிவு எப்போது என்ற கேள்வி எழுப்பி, ஒரு காலத்தில் இது நடக்கத்தான் போகிறது என்ற உறுதியுடன் பறைசாற்றுகிறார் பாரதிதாசன்;

''ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்பராகிவிட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவர் உணரப்பா நீ''

ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டவர்களே! இந்த நிலை உமக்கு வராது என்று நினையாதீர் என்று எச்சரிக்கிறார்.

பாரதிதாசனை குறுகிய பார்வை உள்ளவர் என்று (பிற்காலத்தில் அவர் திராவிட இயக்கத்

www.tamilarangam.net



தாருடன் சேர்ந்து திராவிட நாடு பற்றி பாடல்கள் எழுதிய காரணத்தால் கூறுவார்கள். திராவிட நாடு பற்றி பிரச்சாரம் செய்தது ஒரு குறுகிய காலகட்டத்தில்தான். திராவிட நாடு பற்றிய கொள்கை தவறென்று புரிந்து கொண்டு பெரியார் கைவிட்டபோது இவரும்கைவிட்டார். பின்னர் அண்ணா அவர்களும் 1962ல் அக் கோரிக்கையை கைவிட்டார். பாரதிதாசனின் நிலை பாரதியுடன் சேர்ந்திருந்த பழைய நிலைகுத் திரும்புகிறது.

''ஏறி நின்று பாரடா எங்கும்;
எங்கும் பாரடா இப்புவி மக்களை
பாரடா உனது மானிடப் பரப்பை
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்
என்குலம் என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சி
கொள்!

அறிவை விரிவுசெல்! அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
அணைத்துகொள்! உன்னைச் சங்கம
மாக்கு
மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும் பேதமில்லை
உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!
புகல்வேன் ''உடைமை மக்களுக்குப்
பொது''

புவியை நடத்துப் பொதுவில் நடத்து!
வானைப் போல மக்களைத்தாவும்
வெள்ள அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே!''

இப்படிப்பட்ட ஒரு விரிவான உலகப் பார்வை பாரதிதாசன் பெறுவதற்கான காரணம் பாரதியைப் போலவே பாரதிதாசனும் பொது உடைமைக் கொள்கையைப் புகழ்ந்து வரவேற்றுப் பாடியதுதான். அதையே அப்பட்டமாக தன்னுடைய கருத்தை—முப்பது கோடி ஜனங்களின் சங்கம்—ஒப்பிலாத சமுதாயம் உலகத்துக்கோர் புதுமை—என்று பாரதி பாடியது போலவே பாரதிதாசனும் கீழ் வருமாறு பறைசாற்றுகிறார்:

''புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்
போம்
பொதுவுடைமை கொள்கை திசையெட்டும்
சேர்ப்போம்
புனிதமோடதை எங்கள் உயிரென்று
காப்போம்
இதயமெலாம் அன்பு நதியினில்
நனைப்போம்
'இது எனது' என்னுமோர் கொடுமையைத்
தவிர்ப்போம்''

இந்தப் பாடலிலிருந்து பாரதிதாசனின் சிந்தனை சித்தாந்த ரீதியாகவே விசாலமடைந்திருக்கிறது என்பதைத் தெளிவாகப் பார்க்கலாம். குறுகிய, தேசிய, இனவெறி உள்ளவராக இருந்தால் இதைப் பாடிஇருக்க முடியாது. 'உணர்ச்சி வயப்படும் ஒரு கவிஞர் ஒரு காலகட்டத்தில் தோன்றிய திராவிட நாடு பிரிவினை இயக்கத்தின் வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டார் என்பதும், அதிலிருந்து அவர் மீண்டார் என்பதும் யதார்த்தமாகும். இரண்டாம் உலகப் போர் பற்றி ஓர் அற்புதமான கவிதை எழுதியுள்ளார். எப்படி ஹிட்லர் மக்களின் நலன்களையெல்லாம் புறக்கணித்து விட்டு யுத்தத்திற்குத் தயாரானான் என்பதைப் பாடுகிறார்......

''ஆங்கில நாட்டையும் அமெரிக்காவையும்
எரிக்க நினைத்த இட்லர் எனும் குருவி
நெருப்புக் குழியில் விழுந்தது''

எப்படி என்பதையும் விளக்குகிறார். இறுதியிலவன்,

''உருசிய நாட்டை அழிக்கச் செலுத்தி
னான்
உலகின் உயிரை ஒழிக்கச் செலுத்தினான்
பெரிதினும் மிகவும் பெருநிலை கண்ட
உருசிய நாட்டை ஒழிக்கச் செலுத்தினான்
மக்கள் வாழ்வின் மதிப்பு—இன்னதென
ஒக்கவாழும் உறுதி இதுவென
முதிய பெரிய முழுநிலத்திற்கும்
புதியதாகப் புகட்டிய நாட்டில்
செலுத்தினான் இட்லர், தீர்ந்தான்,
முற்றிற்று!''

அன்று 1945ல் இட்லரின் ஆக்கிரமிப்பை செஞ்சேனையும் சோவியத் மக்களும் ஒழித்துக் கட்டியதையும் அதற்கு காரணமாக இருந்த சோசலிஸ அமைப்பையும், இவ்வாறு வெகுவாகப் புகழ்கிறார் பாரதிதாசன்.

தன் காலத்திய உலக அரசியல் நிலைமைகளை உணர்ந்திருந்ததன் விளைவுதான் இந்தப் பாடல்.

''உருசிய நாட்டின் உடைமையைக்
கடமையை
மக்கள் தொகையால் வகுத்தே,வகுத்ததை
உடலில் வைத்தே உயிரினால் காக்கும்
உருசியத்தை இட்லர் உணர்கிலான்''

தங்கள் நாடு தங்களுக்குச் சொந்தம் என்பதை உணர்வுபூர்வமாக உணர்ந்து அதற்காகத் தங்கள் உயிரையும் கொடுக்கத் துணிந்த அந்த உருசியத்தை, உலகத்தைக் கொள்ளையடிக்க முயன்ற இட்லர் எப்படி உணர்வான்? என்பதே கவிஞர் எழுதிய பாடலின் கருத்து.

ஜப்பான், கிழக்கிந்திய நாடுகள் மீது படையெடுத்து வந்தபோது ஜப்பானுடன் சேர்ந்தால்

www.tamilarangam.net



பிரிட்டிஷிடமிருந்து சுதந்திரம் பெற்றுவிடலா மென்று சிந்தித்தனர் அக்காலத்திய தேச பக்தர்கள் சிலர். ஜப்பானுடைய நோக்கத்தை ஜப்பானிய ஆக்கிரமிப்பை, அது ஆசியா கண்டத்தை சேர்ந்தது என்பதால் கவிஞர் மன்னிக்கத் தயாராக இல்லை. இதோ:

''ஜப்பான் காரன் தன்கொடி நாட்ட
இப்பெரு நாட்டின் எழில் நகரங்களில்
குண்டெறிகின்றான் கொலையைத்
தொடங்கினான்!
பண்டை நாள் மறத்தொண்டு கற்கண்டென
நாய்க்குட்டி நாடுகள் நன்று சுாணக்
காட்டிய தமிழகம் கைகட்டி நிற்குமா?
ஊட்டத் தோளை ஓலைத்தோளென்னுமா''

பாரதி பிறந்த உயர்ந்த ஜாதியை மனதிற் கொண்டு, அவனைப் 'பார்ப்பனக்' கவிஞன் என்று தள்ளிட நினைத்தவர்களை அவர் எத்தனை வேகத்துடன் தாக்கினார் என்பது தெரிந்ததே. 'புது நெறி காட்டிய புலவன்' என்ற தலைப்பில் திருச்சி வானொலி நிலை யத்தில் 1946ல் கவியரங்கத்திற்குத் தலைமை வகித்துப் பாடிய பாடலில் அற்புதமாக பாரதி யைச் சித்தரிக்கிறார். அந்தப் பாடலில் பாரதி பாடிய பாடல்களையெல்லாம் தொகுத்துக் தந்துவிட்டு, ''பாரதி பெரிய உள்ளம் பார்த் திடுவீர்'' என்று அறை கூவி—

''மனிதர் யாரும் ஒருநிகர்
சமானமாக வாழ்வமே
என்றறைந்தா ரன்றோ''

என்று அவர் ஒரு சமதர்ம கவிஞன் என்ற நிலை நாட்டியபின் ஒரு கேள்வியும் எழுப்புகிறார்....

ஒரு கவிஞனையும் அவனுடைய சிந்தாந்தப் பார்வையையும் மதிப்பிடும்போது அவனது வாழ்க்கை முழுவதையும் பார்த்து, அவனது வாழ்நாள் முழுவதிலும் என்ன செய்தான் என்பதைக் கொண்டே ஒரு முடிவுக்கு வர வேண்டும். அதிலும் அவன் ஆழமாகப் பதித்த கருத்துக்கள் எவை. அந்தக் கருத்துக்கள் சமுதாய வரலாற்று நீரோட்டத்துடன் எவ்வாறு ஒத்திருக்கின்றன என்பதைக் கணிப்பதன் மூலமே சரியானதோர் முடிவுக்கு வர முடியும். அப்படிக் கணித்திடும் போது பாரதிதாசன் தனது வாழ்நாளில் பெரும் பகுதியிலும், தனது பாடல்களில் பெரும்பாலானவற்றிலும் பாரதி யின் வழியில்தான் நடை போட்டிருக்கிறார் என்று உறுதியாகச் சொல்லமுடியும். அந்தப் பாவேந்தரின் நூற்றாண்டு விழாவினை முற் போக்காளர்கள் குதூகலத்துடன் கொண்டாடிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாரதி வழியில் நின்று அவர் தாசனாகி பாடிய ஒரு பாடலுடன் இந்தக் கட்டுரையை முடித்துக் கொள்கிறேன்.

''எல்லார்க்கும் நல்லின்பம்
எல்லார்க்கும் செல்வங்கள்
எட்டும் விளைந்ததென்று
கொட்டு முரசே வாழ்வில்
கட்டுத் தொலைந்ததென்று
கொட்டு முரசே''

**செம்மலர், ஏப்ரல் '90**

# பாட்டுக்குரிய களத்தையும் காலத்தையும் நோக்கியாக வேண்டும்

தோழர் கே. முத்தையா அவர்களுக்கு

தியாகு 24-4-90

அன்பான தோழரே!

வணக்கம். இம்மாத செம்மலரில் நீங்கள் எழுதியுள்ள ''தேசியக் கவி பாரதி வழியில் பாவேந்தர் பாரதிதாசன்'' கட்டுரை தொடர்பாக இக்கடிதம் எழுதுகிறேன்.

பாரதியை தேசியக் கவி என்று நீங்கள் வர்ணித்திருப்பது முற்றிலும் சரியானது. பாவேந்தர் யார்? நீங்கள் கொடுத்திருக்கும் தலைப்பு பாவேந்தரும் பாரதியைப் போன்ற தேசிய கவிதான் என்ற எண்ணத்தை ஏற்படுத்து கிறது. பாரதி இந்திய தேசியக் கவி. பாவேந் தரும் இந்திய தேசியக் கவிதான் என்று நீங்கள் கருதினால் அதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். தொடக்க காலத்தில் இவர் இந்தியக் தேசியக் கவிஞராய் இருந்தார் என்பதும், தொண்டர் படைப் பாட்டு, கதர் இராட்டினப் பாட்டு எல்லாம் எழுதினார் என்பதும் மெய்தான், தொடக்க காலத்தில் இந்திய தேசியக் கவிஞராக மட்டுமல்ல, தெய்வ பக்தக் கவிஞராகவும் கூட இருந்தார். மயிலம் சுப்ரமணியனைப் போற்றி துதியமுது படைத் தார் என்பதும் கூட மெய்தான். ஆனால் பாரதிதாசனை முழுமையாகக் கணிப்பதற்கு இந்தத் தொடக்ககாலம் மட்டும் போதுமானதா?

நீங்களே சொல்கிறீர்கள்!

''ஒரு கவிஞனையும் அவனுடைய சித்தாந்தப் பார்வையையும் மதிப்பிடும்போது

**'தியாகு'வின் கடிதம்**

www.tamilarangam.net



அவனது வாழ்க்கை முழுவதையும் பார்த்து அவனது வாழ்நாள் முழுவதிலும் என்ன செய்தான் என்பதைக் கொண்டே ஒரு முடிவுக்கு வர வேண்டும். அதிலும் அவன் ஆழமாய் பதித்த கருத்துகள் எவை, அந்தக் கருத்துக்கள் சமுதாய வரலாற்று நீரோட்டத்துடன் எவ்வாறு ஒத்திருக்கின்றன என்பதைக் கணிப்பதன் மூலமே சரியானதோர் முடிவுக்குவரமுடியும்." [அழுத்தம் எனது]

சரி, மிகச் சரி. ஆனால் இந்த சரியான அளவுகோலை பாவேந்தருக்கு நீங்கள் பிரயோகித்திருக்கிறீர்களா? என்று கேட்க வேண்டியுள்ளது.

பாவேந்தர் 73 ஆண்டுகள் வாழ்ந்தார். 1908இல் பாரதியோடு பழக்கமேற்பட்டதுமுதல் அவர் பொது வாழ்விற்கு வந்தார் எனலாம். மொத்தம் 55 ஆண்டுகாலப் பொதுவாழ்வில் அதிகபட்சமாகச் சொன்னால் 20 ஆண்டுகளுக்கு அவர் இந்திய தேசியக் கவிஞராக இருந்தார். 1928இல் பெரியாரின் தலைமையேற்று சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தது முதல் அநேகமாய் இறுதி நாள் வரை திராவிட இயக்கத்தவராகவே இருந்தார்.

இந்திய தேசியக் கவிஞராய் இருந்த ஆரம்ப 20 ஆண்டுகளில் பாவேந்தர் உருவாக்க நிலையில் இருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஓர் உருவாக்க (formative period) உண்டு. மார்க்சே ஆனாலும் உண்டு. பாவேந்தரைப் பொறுத்தவரை அந்த ஆரம்ப இருபதாண்டுகாலம் அவருக்கு formative period—அவர் மொட்டாய் இருந்த காலம். அவரது "ஆழமாகப் பதிந்த கருத்துக்கள்" எவை என்று பார்த்தால் இது தெளிவாகும். நீங்கள் உங்களது கட்டுரையில் மேற்கோளாய்க் கொடுத்துள்ள பாவேந்தரின் கவிதைகளில் ஒன்று கூட அந்த ஆரம்ப காலத்துக்குரியவை அல்ல என்பதே அவர் "ஆழமாகப் பதிந்த கருத்துகள்" அந்த ஆரம்ப காலத்தியவை அல்ல என்பதற்குப் போதிய சான்று.

பாவேந்தர் தமது வாழ்நாளில் பெரும் பகுதிக் காலம்—கருத்தியலிலும் அரசியலிலும் அவர் முதிர்ச்சியுற்றதற்குப் பிந்திய காலம் முழுவதிலும்—திராவிட இயக்கத்தின் தனிப் பெருங் கவிஞராய்த் திகழ்ந்தார் என்பது எவராலும் மறுக்க முடியாத வரலாற்று உண்மை. "என்ன செய்தார்" என்று பார்க்க வேண்டும் என்று நீங்கள் தந்துள்ள சரியான அளவுகோலை பிரயோகிக்க வேண்டுமானால், இந்த வரலாற்று உண்மையைக் கண்டு கொள்ளாதிருக்க முடியாது.

சுயமரியாதை இயக்கத்திலும் திராவிடர் கழகத்திலும் தீவிரப் பங்காற்றிய பாவேந்தர் திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்த போது தாமும் பெரியாரை விட்டு விலகி, சிறிதுகாலம் கழித்து பெரியாரிடமே திரும்பி வந்தார். கடைசிக்காலத்தில் பெரியாரிடமும்கசப்புற்றார், 'நாம் தமிழர் இயக்கம்' நடத்திய சி.பா. ஆதித்தனாரோடு உறவாடினார், 'தமிழ்த் தேசியக் கட்சி' தொடங்கிய ஈ.வெ.கி. சம்பத்தைத் 1962 ஆம் வருடத் தேர்தலில் ஆதரித்தார்—எல்லாம் உண்மை. ஆனால் சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், நாம் தமிழர் இயக்கம், தமிழ் தேசியக் கட்சி—இவையெல்லாம் தமிழ்த் தேசியத்தின் பல்வேறு வடிவங்கள்தாம்; உருத்திரிபுகள்தாம் என்பதை நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள்.

இப்படி வேண்டுமானால் சொல்லலாம்: பாரதி தேசியக் கவி, பாவேந்தரும் தேசியக் கவிதான். ஆனால் பாரதியார் இந்திய தேசியக் கவி. பாவேந்தர் தமிழ்த் தேசியக் கவி. நீங்கள் கொடுத்துள்ள தலைப்பு இந்தக் கருத்தை ஏற்படுத்துவதற்கு பதில், பாரதி, பாவேந்தர் இருவரும் இந்திய தேசிய கவிகள் என்ற தவறான கருத்தையே ஏற்படுத்துகிறது.

தலைப்பை மட்டும் வைத்துக் கொண்டு இவ்வளவு வாதம் பண்ணலாமா? என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் உங்கள் கட்டுரையில் எந்த இடத்திலும் நீங்கள் பாரதிக்கும் பாவேந்தருக்கும் இடையிலான அடிப்படை வேறுபாட்டை முடிவாகப் பார்க்குமிடத்து பாரதி இந்திய தேசியக் கவியும், பாவேந்தர் தமிழ்த் தேசியக் கவியும் ஆவார் என்பதை—நேரடியாகவோ சுற்றடியாகவே சுட்டக் காணோம்.

"தேசியக் கவி பாரதி வழியில் பாவேந்தர் பாரதிதாசன்" என்று தலைப்பு கொடுப்பதற்கு பதில் "பாரதிவழியில் பாவேந்தர் பாரதிதாசன்" என்ற தலைப்பு கொடுத்திருந்தால் இருவருக்குமிடையிலான பொது அம்சங்களை எடுத்துக் காட்டுகிற கட்டுரையெனக் கொள்ளலாம், குற்ற விமர்சனத்துக்கும் இடமிருக்காது.

எளிய தமிழ், சாதியத்துக்கு எதிர்ப்பு, மனிதநேயம், பொதுமை ஆர்வம் — இவையெல்லாம் பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் இடையிலான பொது அம்சங்கள்.

பாரதியார் ருஷ்யப் புரட்சியை வாழ்த்திப் பாடினார். "ஒப்பில்லாத" பொதுவுடமையைப் புகழ்ந்தார், சாதியத்துக்கு எதிரியாய் இருந்தார் —என்றாலும் சாராம்சத்தில் அவர் இந்திய தேசியக் கவிதான்.

பாவேந்தர் பாசிசத்தை வீழ்த்திய சோவியத்தின் வெற்றியை வாழ்த்தினார், உழைக்கும் மக்களைப் பாடினார், ஓடப்பரை உதையப்

www.tamilarangam.net



பராகச் சொன்னார், புதியதோர் உலகம் செய்வோம் என்று சங்கொலித்தார்—என்றாலும் சாராம்சத்தில் அவர் தமிழ்த் தேசியக் கவிதான்.

பாவேந்தர் பாரதியிடம் மாறாப்பற்றுடைய வராய் இருந்தார், பாரதிதாசன் என்று பெயர் வைத்துக் கொண்டார், பாரதியாரை யார் குறை சொன்னாலும் சினந்தெழுந்து பதிலடி கொடுத்தார், பாரதியிடமிருந்து எளிய தமிழை யும் சாதிய எதிர்ப்பையும் சுவிகரித்துக் கொண் டார்—எல்லாமே உண்மை.

இன்னும் சில விவரங்களையும் சேர்த்துக் கொள்ளலாம். பாவேந்தர் பலரையும் புகழ்ந்த துண்டு; அவர்களையே பிறதொரு சமயம் இகழ்ந்ததும் உண்டு. பெரியார், அண்ணாதுரை போன்றவர்களையே உதாரணமாய்க் குறிப் பிடலாம். இந்த விதிக்கு விலக்காய் அமைந்த ஒரே ஒருவர் பாரதியார். பாவேந்தர் பாரதி யாரைக் குறை சொன்னதே கிடையாது; மற்றவர்கள் குறை சொல்லக் கேட்டு பொறுத் துக் கொண்டதும் கிடையாது.

பாவேந்தர் தமது வாழ்நாளில் தீவிரமாய் முயன்றும் நிறைவேறாமற்போன ஒரு காரியம்- பாரதியார் வாழ்க்கையைத் திரைப்படமாக்க வேண்டும் என்பது. பாவேந்தரின் கடைசி ஆசை என்று கூட இதைக் குறிப்பிடல் தகும்.

ஆனால் இந்த உண்மைகள், பாரதியும் பாவேந்தரும் ஒன்றுதான்—இருவருமே இந்திய தேசியக் கவிகள்தாம்—என்பதற்குச் சான்றாக மாட்டா

நீங்கள் சொல்கிறீர்கள்:

''பாரதிதாசனை குறுகிய பார்வை உள்ளவர் என்று (பிற்காலத்தில் அவர் திராவிட இயக்கத்தாருடன் சேர்ந்து திராவிட நாடு பற்றி பாடல்கள் எழுதிய காரணத்தால்) கூறுவார்கள். திராவிட நாடு பற்றி பிரசாரம் செய்தது ஒரு குறுகிய காலகட்டத்தில்தான். திராவிட நாடு பற்றிய கொள்கை தவறென்று புரிந்து கொண்டு பெரியார் கைவிட்ட போது இவரும் கைவிட்டார். பின்னர் அண்ணா அவர் களும் 1962இல் அக்கோரிக்கையைக் கை விட்டார். **பாரதிதாசனின் நிலை பாரதியுடன் சேர்ந்திருந்த பழைய நிலைக்குத் திரும்புகிறது''**

(அழுத்தம் எனது)

பாவேந்தரின் திராவிட இயக்கத் தொடர்பை மிகச் சாதாரணமாய்த் தட்டிக் கழிக்கும் முயற்சி இது. குறுகிய காலகட்டம் என்றால் எவ்வளவு காலம்? சில நாட்களா? சில மாதங்களா? சில ஆண்டுகளா? உத்தேச மாய் எத்தனை ஆண்டுகள்? 'பாரதிதாசனின் நிலை பாரதியுடன் சேர்ந்திருந்த பழைய நிலைக்குத் திரும்புகிறது' என்றால் என்ன பொருள்? பாவேந்தர் பழையபடி இந்திய தேசியக் கவி ஆகிவிட்டாரா? திராவிட நாடு கோரிக்கையை (கொள்கையை) கைவிட்டது தான் இதற்கு ஆதாரம் என்றால், பெரியாரும் அண்ணாதுரையும் கூட அந்தக் கோரிக்கை யைக் கைவிட்டதன் மூலம் இந்திய தேசியவாதி கள் ஆகிவிட்டார்களா? குறுகிய நோக்கு, விசால நோக்கு என்றெல்லாம் பொத்தம் பொதுவாகப் பேசுவது இந்தக் கேள்விகளுக்கு விடையாகாது.

''பெரியார் கைவிட்ட போது இவரும் கை விட்டார்'' என்று சொல்லிய நீங்களே அடுத்து சொல்கிறீர்கள்:

''உணர்ச்சி வயப்படும் ஒரு கவிஞர் ஒரு கால கட்டத்தில் தோன்றிய திராவிட நாடு பிரிவினை இயக்கத்தின் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார் என்பதும், அதிலிருந்து அவர் மீண்டார் என்பதும் யதார்த்தமாகும்.''

(அழுத்தம் எனது)

பாவேந்தரின் திராவிட இயக்கத் தொடர் பைக் குறைத்துக் காட்டும் முயற்சியில் ஏதேதோ சொல்கிறீர்கள். முதலில் ''பெரியார் கைவிட்ட போது இவரும் கைவிட்டார்'' என்கிறீர்கள் இப்போது ''அதிலிருந்து அவர் மீண்டார்'' என்கிறீர்கள்.

கடைசியாக ஒன்று. பாரதியை ஆனாலும், பாவேந்தரை ஆனாலும், வேறு எந்தக் கவிஞரை ஆனாலும் மதிப்பீடு செய்கிற பொழுது, அவர் என்ன பாடினார் என்பதைப் பார்த்தால் போதாது. எத்தகைய வரலாற்றுப் பகைப் புலத்தில் நின்று அப்படிப் பாடினார் என்பதையும் பார்த்தாக வேண்டும். பாட்டுக் குரிய களத்தையும் காலத்தையும் நோக்கியாக வேண்டும். அதாவது பாட்டுக்குரிய களத்திலும் காலத்திலும் முரண்பட்டு மோதிய சமூக சக்தி கள் எவை? புறவய நோக்கில் அந்தச் சமூகச் சக்திகளில் எதன் (அல்லது எவற்றின்) நலனுக்கு மொத்தத்தில் அந்தக் கவிஞரின் படைப்பு— மெய்ந்நடப்பில் அதன் தாக்கம்—பயன்பட்டது? என்ற கேள்விகளுக்கு விடைகாண வேண்டும்.

இது உங்களுக்குத் தெரியாத ஒன்று என்ப தற்காகச் சொல்லவில்லை. பாரதியை (இந்திய) தேசியக் கவியென்று மதிப்பீடு செய்யும் போது இந்த அளவு கோலை ஆளுகிற நாம் பாவேந்தரை மதிப்பீடு செய்யும் போதும் அதனை மறவாமல் ஆள வேண்டும் என்பதற் காகவே சொல்கிறேன்.

தோழரே! இக்கடிதத்தை செம்மலரில் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இதிலி ருந்து பயனுள்ள விவாதம் எழும்—நீங்களும் நானும் மட்டுமல்ல, மற்றவர்களும் இந்த பகிரங்க விவாதத்தில் கலந்து கொள்வார்கள்— என்று நம்புகிறேன்.

தோழமையுள்ள, (ஒப்பம்) தியாகு 24-4-90

www.tamilarangam.net

# இழந்த அமைதியும் விடுதலையும் தேடி

## ஈழ அகதிகளின் அவலம்

தமிழ்த் தேசிய இனத்தின் மீது 1979இல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஏவிவிட்டு, தமிழ்ப் பேசும் மக்களை இயல்பு வாழ்க்கையிலிருந்து சீரழித்து, சிதைத்து இராணுவ ஒடுக்குமுறைக்குள் சிறிலங்கா இனவாதஅரசு கொண்டு வந்தது. இதிலிருந்து கூர்மைபெறத்தொடங்கிய தமிழர்களின் தேசிய அந்தஸ்துக்கான போராட்டம், இன்று ஈழம் எனும் இலக்கை நோக்கி எதிரிக்கு எதிரான போராட்டத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

பல்வேறு அனுபவங்கள், போக்குகள் அனைத்தையும் உள்வாங்கிக் கொண்ட ஈழவர்களின் விடுதலைப் போராட்டம், இன்று எதிரியை நோக்கிய சரியான திசை வழியில் ஆயுதப் போராட்டப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அழிவுகளும் அவலங்களும், பசியும் பட்டினியும் தொடர்வதான நிகழ்வுகளை வரலாறு தன்னகத்தே கொண்டிருந்தாலும், ஒடுக்கப்படும் மக்களுக்கு ஆதரவாகவே வரலாறு என்றும் இருக்கிறது. 84களில் சிங்கள இனவாத இராணுவ வன்முறைக்கு முகம்கொடுக்க இயலாத மக்கள், தமிழ்நாட்டிற்கு அகதிகளாக பெருமளவில் வந்தனர். இவர்களை தமிழ்நாடு வரவேற்றது; உலகில் வாழும் 7 கோடித் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றப் போராடும் மாவீரர்களின் அன்னையராக, தந்தையராக, சகோதரர்களாக அவர்களை தமிழ்நாட்டு மக்கள் கருதினர். வரலாறு கண்டிராத ஆதரவை வழங்கினர்.

ஆனால் இன்று...?

ஈழத்தின் எதிரிகள், ஈழ விடுதலையைக் கொச்சப்படுத்தியும், போராளிகளை இழிவு படுத்தியும், தமது பிரச்சாரத்தை தமிழ்நாட்டில் வலுப்படுத்தியிருக்கும் இந்நிலையில், மீண்டும் அகதிகள் தமிழ்நாட்டை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நம்பிக்கைகளையும், மன உழைச்சல்களையும் அறிய வேண்டி, மதுரை, வேலூர் அம்பேத்கார், செங்கை அண்ணா ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் சூலை கடைசி வாரத்தில் சென்றோம்.

1. கூடல்நகர்—2220 பேர்; 2. மேலூர்—459 பேர்; 3. உசிலம்பட்டி—496 பேர்; 4. அரக்கோணம்—156 பேர்; 5. ஆற்காடு—122 பேர்; 6. வேலூர்—161 பேர்; 7. சாலவன் குப்பம்—187 பேர்; 8. நெம்மேலி—221 பேர்; 9. கோவளம்—267 பேர் 10. முட்டுக்காடு—170 பேர்.

—இந்த 10 முகாம்களுக்கும் நாம் நேரில் சென்ற போது எம்மால் மக்களின் அவலங்களைத்தான் காணமுடிந்தது.

84ஆம் ஆண்டைப் போன்று, தற்போது எளிதாக அகதிகள் முகாமினுள் செல்ல முடியவில்லை. ஆயுதப் போலீசார் ஒவ்வொரு முகாமின் வாசலிலும் வாக்கி—டாக்கியை வைத்துக் கொண்டு செயற்படுகிறார்கள். ஒவ்வொரு முகாமிலும் துணை வட்டாட்சியாளர் அல்லது கிராம நிர்வாக அதிகாரி ஒருவர் பொறுப்பாக இருக்கிறார். இவரிடம் சென்றுதான் அகதிகள் தொடர்பான அனைத்து விபரங்களையும் அறிய வேண்டியதிருந்தது. சில வட்டாட்சியாளர்கள் பேசுவதற்கு அடம் பிடித்தனர்; நம் மீது எரிந்து விழுந்தனர். எதற்கெடுத்தாலும் 'மேலிடத்து உத்தரவு' என்றார்கள். கெடுபிடிகளையெல்லாம் மீறி அகதிகளிடம் பேசலாம் என்றால், அகதிகள் எம்மைச் சந்தேகம் கொண்டு பேசமறுத்தார்கள்.

அகதிகளாக வந்துள்ள பெண்களுக்கு இரண்டு சேலையும், ஆண்களுக்கு கைலி ஒன்று துண்டு ஒன்றும் கொடுக்கப்பட்டு வருகிறது. அத்துடன் ரேசன் கார்டு மற்றும் பாத்திரங்கள் வழங்கப்பட்டு வருவதைக் காண முடிந்தது. செங்கை அண்ணா மாவட்டத்தில் சமையல் பாத்திரங்கள் இன்னும் வழங்கப்படவில்லை என அகதிகள் குறை கூறினர். 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு ரூ315 உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. ஒரு கிலோ அரிசி 0.57 பைசா வீதம் மாதம் 30 கிலோ அரிசி வழங்கப்படுகிறது என்று அகதிகள் கூறினர். ஒரு குடும்பத்துக்கு ஒரு பாய் மட்டும் வழங்கப்படுவதை எல்லா முகாம்களிலும் அகதிகள் குறை கூறினர்.

நாம் சந்தித்த இந்த 10 முகாம்களில் இருந்தவர்கள் பெரும்பாலும் மன்னார், வவுனியா, கிளிநொச்சி பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

தாழ்வுபாகு என்னும் கிராமத்தைச் சேர்ந்த ஜெபமாலை என்பவரிடம் நாம் பேசிய போது, ''தம்பி! ஆருக்கு என்ன கெடுதல் செய்தனன்.

www.tamilarangam.net

எங்கட வாழ்வு ஏன் உப்பிடி ஆச்சு" என்று அழ ஆரம்பித்தவர் 4 நாட்களாக கடலில் அலைக்கழிந்து சிங்கள நேவியிடமிருந்து தப்பி வந்ததாகக் கூறினார். இவர்களோடு வந்த மற்ற இரண்டு படகுகள் சிங்கள கடற்படை விரட்டியதால் என்ன ஆனது என்று தெரியாமல் இருக்கிறோம் என்றார்.

பேசாலையைச் சேர்ந்த லியோன் : என்ரை நிலையை ஆருக்குத்தான் எடுத்துச் சொல்வது? உங்கட நாட்டைப் போல் எங்கட நாட்டில் பெடியள் இருக்க ஏலாது. 15 வயதுப் பெடியளை புலி எண்டு ஆமி புடுச்சிப் போவுது என்று பெருமூச்செறிந்தார்.

புங்குடு தீவைச் சேர்ந்த வின்சென்ட் என்பவர் கூறும்போது, இராணுவம் சிறு குழந்தைகள் உட்பட அனைவரையும் சுட்டுக் கொல்கிறது என்றும் உயிர் பிழைக்கவே தமிழ்நாடு வந்ததாகவும் சொன்னார். தனது தம்பியை (பள்ளியில் படித்துக் கொண்டிருந்தவர்) இராணுவம் பிடித்துச் சென்று சித்திரவதை செய்து கொன்றதாகக் கூறினார். "தமிழ் மக்கள் இனி அங்கு வாழவே ஏலாது" என்று விரக்தி தெரிவித்தார்.

வவுனியாவைச் சேர்ந்த சதீஷ் : அமைதிப் படை இருந்த போது ஒரளவு அமைதியா இந்தனன். என்ன இருந்தாலும் உங்கட படை ஒரு அந்நியப் படை தானே! இந்தியப் படையின் நிழலில் நாம் எவ்வளவு காலம் ஜீவிக்க ஏலும்? சிங்களப் பெடியளும் அம்பாறையில் அட்டகாசம் பண்ணிப்போடுத் தங்கட ஊருக்குப் போகினை. அதனால அம்பாறையில் தமிழ் மக்கள் வெளியேறுகின்றனர்.

தலைமன்னாரைச் சேர்ந்த யோகேஸ்வரி என்ற 70 வயதிற்கும் மேற்பட்ட பெண்மணியிடம் பேச்சுக் கொடுத்தபோது, "எங்களைப் பத்தி ஆர்தான் கவலைப்படுகினம்?.... என்ரை கவலைகளை ஆருக்குச் சொல்லி அழ" என்று விரக்தியோடு பேசலானார். ஈழ மக்கள் தங்களது கவலைகளைக் கூட சொல்லி அழ இயலாத நிலையில் இருப்பதை எம்மால் உணர முடிந்தது. ஈழம் கிடைக்குமா? என்று நாம் வினவியபோது "கிடைக்காலமா போய்விடும்; பெடியள் விட்டு விடுவார்களா?" என்று எதிர் வினாதொடுத்தார். அரிசி கிலோ 40 ரூபாய்; மண்ணெண்ணெய் 1 பாட்டில் 75 ரூபாய் சீனி கிலோ 90 ரூபாய், என்று விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளதாகவும், உணவுப் பொருட்கள் கிடைக்காமல் மக்கள் பட்டினி கிடக்கிறார்கள் என்றும் கூறினார்.

மன்னாரைச் சேர்ந்த கருப்பையா என்பவரிடம், "மன்னாரில் அகதிகள் முகாம் அமைக்கப்பட இருக்கிறதே, அங்கு செல்வீர்களா?" என்று கேட்ட போது: ஆரை நம்பினாலும் சிங்களனை நம்பக் கூடாது. வடமராட்சிப் படுகொலையப்போ பள்ளியிலும் கோயிலிலும் மக்களை தங்கச் சொல்லிவிட்டு ஒரே குண்டா போட்டு கொன்னவன் தானே சிங்களன்; அரசாங்கம் சிங்களவரிடம் இருக்கிறதால அவையின்ற ராஜியம் தானே.

வவுனியாவைச் சேர்ந்த கந்தசாமி, "தமிழீழம் எடுத்தால்தான் அமைதி வரும். இல்லாவிடில் நாங்க சண்டை பிடிக்க வேண்டியதுதான்" என்றார். இவர் தன்னுடைய கையை குண்டு வீச்சினால் இழந்துள்ளார். விமானக் குண்டு வீச்சிலிருந்து தப்புவதற்காக மக்கள் நாள் கணக்கில் பதுங்கு குழிகளில் உணவு, குடிநீர் முதலியன இல்லாமல் அவதியுறுவதாகவும், மருத்துவமனைகளில் மருந்துகள் இல்லையென்றும் கூறினார்.

புத்தளத்தைச் சேர்ந்த நல்லையா, தங்களிடம் இருந்த நகையை குறைந்த விலைக்கு விற்றுவிட்டு, கால் நடையாக மன்னார் வந்து, மன்னாரிலிருந்து படகில் தனுஷ்கோடி வந்ததாகச் சொன்னார். 7 நாட்கள் உணவும், ஒய்வும் இன்றி துன்பப்பட்டதாகவும், ராணுவம் எந்த நேரத்திலும் தாக்கலாம் என்ற பயத்தில் இரவு நேரங்களிலும் தூங்காமல், தன்னுடைய வயதுக்குவந்த பெண்களுடன் தப்பி வந்ததாகக் கூறினார். தன்னுடைய இரண்டு மகன்களை ஏற்கனவே இனவாத இராணுவத்துக்கு பலி கொடுத்துள்ள இவர், தன்னுடைய ஒரேமகனும் தற்போது 'காணாமல்' போய் விட்டதாகக் கூறினார். இயக்கம் எதிலும் தங்கள் மகன் இருப்பாரா? என்று கேட்டதற்கு, "அவ்வாறு அவன் இருந்தால் இருக்கட்டும்" என்றார்.

ஒவ்வொரு அகதிகள் முகாமை விட்டும்நாம் வெளியேறுகிறபோது மனச் சுமையுடனேயே வெளியேறுகிறோம். தங்களுடைய எதிர்காலம் பற்றிய நிச்சயம் இன்மையுடன், காண்பதையெல்லாம் கானல் நீராகக் கருதும் முதியோர்களின் முகமும், தங்களின் இளமைக் காலக் கனவுகளை ஈழத் தெருக்களில் விட்டு விட்டு ஏக்கம் நிறைந்த விழிகளுடன் இருக்கும் இளைஞர்களின் முகமும், இன்னல்களை அறியாது பயமறியா கன்றுகளாக ஆமி-போராளி விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களின் மலர்ச்சியான முகமும் எம் முன் மீண்டும் மீண்டும் மோதின. நாமும் மீண்டும் மீண்டும் திரும்பிப் பார்த்துக் கொண்டே பாரமான மனத்துடன் "இவர்களுக்கான அமைதியும் விடுதலையும் எங்கே போனது" என்று நினைத்தவாரே பிரிய மனமில்லாது பிரிகிறோம். ☐

—தேவதாஸ், பெருமாள் மற்றும்
சிற்பி நூலகத்தினர்.

வெளியிடுபவர் : இரா. திரவியம், 25 அருணாசலபுரம் மெயின்ரோடு, அடையாறு, சென்னை-20
அச்சிட்டோர் : ஜே. ரமணி, பிளேஸ் பிரிண்டர்ஸ், சென்னை-20

www.tamilarangam.net






www.tamilarangam.net

நட்புறவு பாலம்.
பதிவு எண்: ம.என்.எம்.எஸ். (என்) 371



## ஒரு மரத்தைக்கூடக் காணமுடியவில்லை

ஒரு மரத்தடி நிழல் போதும்
உன்னைத் தைரியமாய் நிற்கவைத்துவிட்டுப்
போவேன்.
வெட்டவெளியில் நீ நின்றால்
என் மனம் தாங்கமாட்டேன் என்கிறது.
மேலும்
மரத்தடியில் நீ நிற்கையில்தான்
ரொம்ப அழகாயிருக்கிறாய்!

கர்ப்பிணிப் பெண்ணை
அவள் தர்யிடம் சேர்ப்பதுபோல்
உன்னை ஒரு மரநிழலில் விட்டுப்போக விழைகிறேன்.
மரங்களின் தாய்மை
முலைமுலையாய்க் க்னிகள் கொடுக்கும்.
கிளைகளின் காற்று
வாத்ஸல்யத்துடன் உன் தலையைக் கோதும்.
மரம் உனக்குப் பறவைகளை அறிமுகப்படுத்தும்.
அந்தப் பறவைகள் வானத்தையும், தீவுகளையும்.
வானமோ அனைத்தையும் அறிமுகப்படுத்தி விடுமே.
ஒரு மரத்தடி நிழல் தேவை
உன்னைத் தைரியமசய் நிற்க வைத்துவிட்டுப்
போவேன்.

— தேவதேவன்